# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## வருடாந்த அறிக்கை 2016

இது 2016இல் அதன் செயற்பாடுகள் மீது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையாகும். இது 1996இன் 21, இலங்கை மனித உரிமைகள் சட்டத்தின் பிரிவு 30உடனான இணக்கப்பாட்டின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
தலைமை அலுவலகம்
இல. 14, ஆர்.எ.டீ மெல் மாவத்தை, கொழும்பு 04
தொலைபேசி: (94) 0112505580, 2505581, 2505582
தொலைநகல்: (94) 0112505591
மின்னஞ்சல்: sechrcsl@gmail.com
இணையதளம். www.hrcsl.lk

# ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 2016

**தவிசாளர்**

கலாநிதி நெளும் தீபிகா உடகம

**ஆணையாளர்கள்**

திரு.எச்.கஸாலி ஹுசெயின்

திரு. சாலிய பீரிஸ்

செல்வி அம்பிகா சற்குணநாதன்

கலாநிதி உபநந்த விதானபத்திரன

# தவிசாளரின் செய்தி

இ.ம.உ.ஆ.கு.க்கு முக்கியமான ஆண்டொன்றாக 2016 குறித்துக் கொள்ளப்படுகின்றது. இலங்கையின் அரசியலமைப்புக்கு புதிதாக ஏற்படுத்தப்பட்ட 19ஆவது திருத்தத்தின் (2015) கீழ் நியமிக்கப்பட்ட புதிய ஆணைக்குழு 2015 ஒக்ரோபரில் பதவியேற்றுக்கொண்டது. எமது 2015 வருடாந்த அறிக்கையில் நான் சுட்டிக்காட்டியுள்ளவாறு, 19ஆவது திருத்தத்தின் கீழ் அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்பட்ட நியமிப்புப்பெறுனர்களுடன் அதன் மீள்-அமைப்புடன் அதன் மீது இடப்பட்டிருந்த அதிகரித்த பொதுசன எதிர்பார்ப்புக்கள் குறித்து ஆணைக்குழு உண்மையிலேயே அறிந்திருந்தது. 2015இல் பதவியில் இருந்த சில மாதங்களில் பணியாளருடனும், சிவில் சமூகத்துடனும், அரசாங்க அதிகாரிகளுடனும் மற்றும் வேறு பயனுரித்தாளர்களுடனும் பரந்த வீச்செல்லையிலான உசாவுகைகளை நடத்துவதற்கான வாய்ப்பொன்றை அது ஆணைக்குழுவுக்கு வழங்கியது. அந்த அறிவுடன் சீர்திருத்த மனோநிலையிலான கொள்கைத் திட்டமிடலையும் அத்துடன் நிறுவனரீதியிலான முன்னேற்றத்தையும் 2016இல் ஆரம்பிப்பதற்கு ஆணைக்குழு கிளம்பியது.

கொள்கை முன்னுரிமைகள் மற்றும் அமுலாக்கல் உபாயங்கள் ஆகியன தொடர்பில், பாரியளவிலான தெரிவினைச் சாதிப்பதற்காக, சிரேஷ்ட முகாமையாளர்களின் பங்கெடுப்புடன் ஆணையாளர்கள் மத்தியில் சிரேஷ்ட மட்டத்திலான கலந்தாய்வில் ஆணைக்குழு ஈடுபட்டிருந்ததை ஆண்டின் ஆரம்பம் கண்டது. இதன் தொடர்ச்சியாக, மூன்று வருட காலமொன்றுக்கு (2017–2019) ஆணைக்குழுவின் மூலோபாயத்திலான திட்டத்தை வகுத்தமைக்குமுகமாக பலதரப்பட்ட பயனுரித்தாளர்களுடன் உசாவுகைகளின் ஆரம்பத்தையும் ஆண்டு கண்டது. அது தொடர்பில் முக்கியமான பங்களிப்பொன்றைப் பத்து பிராந்திய அலுவலகங்கள் மேற்கொண்டன. பரந்த பெரும்பான்மையைக் கொண்ட இலங்கையர்களுக்கு ஆணைக்குழுவின் பகிரங்க முகமே அதன் பிராந்திய அலுவலகங்கள் என்பதையிட்டு ஆணைக்குழு அறிந்துள்ளது.

முழு அளவில், 2015இல் அவதானிக்கப்பட்டவாறு, நாட்டில் மனித உரிமைகள் குறித்த சூழ்நிலையில் மேம்படுத்தல்களின் தொடர்ச்சியை ஆண்டு சான்றுபகன்றது. வலிந்த காணாமலாக்கப்படல்களினதும் அத்துடன் அரசியல்ரீதியில்

செயல்நோக்கமளிக்கப்பட்ட சட்டத்திற்குப் புறம்பான மரண தண்டனைகளினதும் அறிக்கையிடப்பட்ட விடயங்கள் இருக்கவில்லை. ஊடகச் சுதந்திரம், சங்கம் மற்றும் ஒன்றுகூடுதல் ஆகியன உட்பட கருத்துச் சுதந்திரம் மிகவும் அதிகளவு சுதந்திரமாக நிறைவேற்றப்பட்டதை விஸ்தரிக்கப்பட்ட ஜனநாயக இடங்கள் கண்டன.

எனினும், உயர்ந்த எண்ணிக்கையொன்றைக் கொண்ட சித்திரவதையின் முறைப்பாடுகளை ஆணைக்குழு தொடர்ந்தும் பெற்றது. பெறப்பட்ட சித்திரவதையின் முறைப்பாடுகளின் ஒழுங்குமுறை ஆணைக்குழுவுக்கு ஆழ்ந்த கரிசனையாக விளங்கியது. 2011இல் அவசரகால நிலையையும் அத்துடன் 2009இல் முடிவடைந்த சிவில் யுத்தத்தின் பின்னர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் அதிகளவில் குறைக்கப்பட்ட பயன்படுத்தலையும் நீக்கிய பின்னர் அடுத்துவரும் ஐந்து வருடங்களுக்கு இது விசேடமாக அவ்வாறு விளங்கும். குடியரசின் ஜனாதிபதியின் பங்கெடுப்புடன் ஜூன் 26 சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் சர்வதேச தினத்தன்று ஆரம்பிக்கப்பட்ட நாடுபூராவிலுமான 'சித்திரவதையை நிறுத்துக' இயக்கமொன்றினை ஏற்றுக்கொள்வதற்கு ஆணைக்குழுவின் கரிசனை இட்டுச்சென்றது.

சமூகத்தின் பரவலாக்கத்தை திட்டவட்டமாக ஏற்றுக்கொண்ட உறுதியான யுத்தத்திற்குப் பிந்திய மனித உரிமைகள் கலாசாரமொன்றை இலங்கை கட்டியெழுப்புவதென்றால், சட்டத்திலும், நடைமுறையிலும் பாரபட்சத்தினைக் கவனத்திற்கெடுக்கும் முக்கியத்துவத்தினை அங்கீகரித்து விளிம்புநிலையிலான சமூகங்களின் உரிமைகள் மீது பணியாற்றுவதையும் ஆணைக்குழு முன்னுரிமைப்படுத்தியுள்ளது. அது தொடர்பில், பால்நிலையிலான நீதி, அங்கவீனர்களின் உரிமைகள், பாலியல் சிறுபான்மையினர், வயது மூப்பானதும், புலம்பெயர்ந்ததுமான தொழிலாளர்கள் போன்ற கருப்பொருள்கள் மீது ம.உ.ஆ.கு.இனதும் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதியைக் கொண்ட கருப்பொருள் சார்ந்த உப-குழுக்களினதும் தொடரொன்று உருவாக்கப்பட்டது.

அரசாங்கத்திற்கு அதன் ஆலோசனைத் தலையீடுகள் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற புதிய நிலைக்கு அமைவாக, மரண தண்டனையை நீக்குவதற்கு ஜனவரி 01 அன்று அரசாங்கத்தின் மீது செய்யப்பட்ட அழைப்பொன்றுடன் ஆரம்பித்து, ஆண்டின் வேறு பெருமளவு முக்கியமான பரிந்துரைகள் செய்யப்பட்டன. நியாயத்திலான உரிமைகளாக பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை ஒன்றிணைப்பதற்கான அவசியத்தை வலியுறுத்திய அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கான முன்மொழிவுகளின் தொகுதியொன்றை ஏனைய முக்கியமான ஆலோசனைப் பரிந்துரைகள் உள்ளடக்கியிருந்தன. அரசியலமைப்பின் மேலாண்மை மற்றும் அதிகாரத்தைப் பங்கிடுதல் ஆகியன உட்பட எதிர்கால அரசியலமைப்பொன்றினுள் உள்ளடக்குவதற்காக அடிப்படை அரசியலமைப்புக் கோட்பாடுகளின் தொகுதியொன்றும் முன்மொழியப்பட்டது. இதேபோல, மதிப்பாய்வுக்கும், ஆலோசனைக்கும் மெதுவாக வெளிப்படுகின்ற நிலைமாறுகால நீதி ஆட்சி மீது ஆணைக்குழு தெளிவான நோக்கினைக் கொண்டிருந்தது.

சிவில் சமூகத்துடன், குறிப்பாக பிராந்திய மட்டத்தில், பலமான இணைப்புக்களைப் புதுப்பிப்பதற்கும் அத்துடன் உருவாக்குவதற்குமான முயற்சிகளை ஆணைக்குழு பலப்படுத்துவதையும் ஆண்டு கண்டது. சனசமூக ஆதரித்துவாதாடுதலுக்கும் மற்றும் மாற்றத்திற்கும் பாரியளவிலான ஆற்றலளவை அடிமட்டங்கள் கொண்டிருக்கின்றன என்ற பலமான விதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஆணைக்குழுவின் நோக்கத்திற்கு

அமைவாக, உசாவுகைக்கும் மற்றும் பங்காண்மைக்கும் ஆண்டின் போது பிராந்திய சிவில் சமூகக் குழுக்களைப் பத்து பிராந்திய அலுவலர்களின் ஒவ்வொருவரும் அமைத்தனர்.

நிறுவனரீதியிலான அபிவிருத்தியில் ஈடுபடுவதற்கான பாரிய செலுத்தலொன்றே சமாந்தரமாக ஓடியது. பணியாளர் முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள், நடைமுறைகளைச் சீர்படுத்தல் (விசேடமாக புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள்), தகவல் தொழில்நுட்பத்தின் பயனை ஊக்குவித்தல் மற்றும் பணியாளரின் நீண்ட கால மனக்குறைகளைக் கவனத்திற்கெடுத்தல், குறிப்பாக ஆட்சேர்ப்பின் திட்டமொன்றுக்கு அங்கீகாரத்தைப் பெறுகின்ற நடைமுறையை ஆரம்பித்தல் ஆகியனவற்றை இது உள்ளடக்கியிருந்தது. தடைகள் பெரும்பாலானவை என்பதுடன், பிரதானமாக அவை காலங்கடந்த அரசாங்க நிருவாக மற்றும் நிதிசார் ஒழுங்குவிதிகள் ஆகும். இருந்த போதிலும், அரசியல் தலையீடு இன்றி, சுதந்திரமான சூழலொன்றில் ஆணைக்குழு பணியாற்றக்கூடியதாகவும் இருந்தது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் மற்றும் ஐ.நா. உயர் ஆணையாளர் செயிக் பின் ராட் ஆகியோரிடமிருந்து பாராட்டுதல்களுடன், சுறுசுறுப்பானதும், நன்மையிலானதுமான ஆண்டொன்று பூர்த்திசெய்யப்பட்டது. அதன் முயற்சிகள் திட்டவட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை குறித்து திருப்தியை ஆணைக்குழு உணர்கின்றது. ஆணைக்குழுவின் சார்பாக, எமது முயற்சிகளைக் கருத்தாழமிக்கதாக்குவதற்காக பலரினாலும் நீடிக்கப்பட்ட அளவற்ற ஆதரவையிட்டு எமது மனமார்ந்த பாராட்டுதலைப் பதிவு செய்வதற்கு நான் விரும்புகின்றேன்.

**கலாநிதி நெலும் தீபிகா உடாகம**
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# உள்ளடக்கங்கள்


**அ. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 3**

**ஆ. தவிசாளரின் செய்தி 4**

**இ. உள்ளடக்கங்கள் 7**

**சுருக்கப்பெயர்களின் பட்டியல் 9**

**அத்தியாயம் 1: ஆணைக்குழு 11**

1.1 ஆணைக்குழுவின் மேலோட்டம் 11
1.1.1 தொலைநோக்கு 11
1.1.2 செயற்பணி 11
1.1.3 உள்மையப் பெறுமதிகள் 12
1.1.4 ஆணைக்குழுவின் சின்னம் 12
1.2 ஆணையின் தன்மை மற்றும் நோக்கெல்லை 12
1.3 தாபனரீதியிலான கட்டமைப்பு 15

**அத்தியாயம் 2: மதிப்பாய்வில் உள்ள ஆண்டு 17**

2.1. முக்கியமான சாதனைகள் 17
2.1.1 புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள் 18
2.1.2 வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்கள் 19
2.1.3 தாபனரீதியிலான முன்னேற்றங்கள் 19
2.1.4 உபாயத் திட்டம் 20
2.2. அரசாங்கத்திற்குப் பரிந்துரைகள் 20
2.3. கொள்கைச் சீர்திருத்தத்திற்கு வேறு ஆதரித்துவாதாடுதல் 25
2.4. ஐ.நா. அமைதிகாப்பவர்களாகப் பணியாற்றுவதற்கு இலங்கையின் இராணுவ ஆளணியினரைத் தணிக்கை செய்தல் 26
2.5. சவால்கள் 26

**அத்தியாயம் 3: புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள் 29**

3.1. மீள்பார்வை 29
3.2. உரிமைகளினால் தனிப்பட்ட முறைப்பாடுகளின் உதாரணங்கள் 30
3.2.1. சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மை 35
3.2.2. பாதுகாவலிலான வன்முறை 39
3.3. அதன் சொந்த இயக்க விசாரணைகள் 40

**அத்தியாயம் 4: ஆராய்ச்சி மற்றும் கண்காணித்தல்** **43**

4.1 கருப்பொருள்-சார்ந்த உப-குழுக்கள் 43

4.2. நடத்தப்பட்ட ஆய்வுகள் 44

4.3. கண்காணித்தல் செயற்பாடுகள் 45

**அத்தியாயம் 5: கல்வி மற்றும் வெளிக்களம்** **49**

5.1. பொதுசன விழிப்பியலை உயர்த்துதல் 49
5.2. ஊடகங்களுடன் ஈடுபடுதல் 54
5.3. சிவில் சமூகத்துடன் ஈடுபடுதல் 56
5.4. ஆலோசனை வழங்கல்

**அத்தியாயம் 6: சர்வதேசக் கூட்டுமுயற்சி** **57**

6.1. சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை மேம்படுத்தல் 57
6.2. ஆசிய பசுபிக் அரங்கத்துடன் (APF) இணைப்பினைப் பலப்படுத்துதல் 60
6.3. சர்வதேச உறுப்புக்களுக்கு அறிக்கைகளையும், பதிலிறுப்புக்களையும் சமர்ப்பித்தல் 60
6.4. வேறு சர்வதேச கூட்டுமுயற்சிகள் 61

**அத்தியாயம் 7: பிராந்திய மற்றும் உப-அலுவலகங்கள்** **63**

7.1 மீள்பார்வை 63
7.2 கையாளப்பட்ட முறைப்பாடுகள் 64
7.3 கண்காணித்தல் செயற்பாடுகள் 66
7.4 கல்வி மற்றும் வெளிக்களச் செயற்பாடுகள் 68

**அத்தியாயம் 8: மனித வளங்கள், நிருவாகம் மற்றும் நிதி** **69**

8.1 அலுவலர் முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் 69
8.2 தொழில் நன்மைகள் 71
8.3 தொழில் மற்றும் வெற்றிடங்கள் 72
8.4 வருடாந்த நிதிசார் கூற்றுகள் 72

**பிற்சேர்க்கைகள்** **76**

பிற்சேர்க்கை 1: இலங்கையில் இ.ம.உ.ஆ.கு.இன் பிரசன்னம்: தேசப்படம்

பிற்சேர்க்கை 2: பரிந்துரைகளின் பட்டியல்

பிற்சேர்க்கை 3: பொறுப்பேற்கப்பட்ட அதன் சொந்த இயக்க விசாரணைகளின் பட்டியல்

பிற்சேர்க்கை 4: 2016ஆம் ஆண்டில் இ.ம.உ.ஆ இன் தவிசாளர் மற்றும் ஆணையாளர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற கூட்டங்கள், நிகழ்சிகள், பட்டறைகள் பட்டியல்.

பிற்சேர்க்கை 5: 08 மார்ச் 2016 திகதியிடப்பட்ட மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையாளரின் கடிதம்

# சுருக்கப்பெயர்களின் பட்டியல்

| | |
|---|---|
| ஆ.ப.அ. | ஆசிய பசுபிக் அரங்கு (Asia Pacific Forum) |
| ப.ஞா.ச.ம.ம. | பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டம் (Bandaranaike Memorial International Conference Hall) |
| CEDAW | பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தின் சகல வடிவங்களையும் ஒழிப்பது மீதான சமவாயம் (Convention on the Elimination of All Forms of Discrimination against Women ) |
| இ.ம.உ.ஆ.கு | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (Human Rights Commission of Sri Lanka) |
| I.D.P | உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் |
| த.தொ. | தகவல் தொழில்நுட்பம் (Information Technology) |
| LGBTIQ | பெண் ஓரினச்சேர்க்கையாளர், ஆண் ஓரினச் சேர்க்கையாளர், ஈரினச் சேர்க்கையாளர், மாற்றுப் பாலினத்தவர், இருபால் உடலமைப்பினர், பால்நிலைக் குழப்பத்திலுள்ளவர் (Lesbian, Gay, Bisexual, Transgender, Intersex and Questioning) |
| தே.ம.உ.நி.கள் | தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் (National Human Rights Institutions) |
| ம.உ.உ.ஆ.அ. | மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் (Office of the High Commissioner for Human Rights) |
| கா.போ.அ | காணாமல் போனவர்களின் அலுவலகம் |
| ப.த.ச. | பயங்கரவாத தடுப்புச் சட்டம் (Prevention of Terrorism Act) |
| ந.ஒ.செ | நல்லிணக்கத்தை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் |
| இ.ஒ.கூ | இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் |
| இ.ரூ.கூ | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் |
| பா.நோ.ம.பா.அ | பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின அடையாளம் |
| தீ.பு.பி | தீவிரவாத புலனாய்வு பிரிவு |
| ஐ.நா. | ஐக்கிய நாடுகள் (United Nations) |

| | |
|---|---|
| ஐ.நா.அ.நி. | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (United Nations Development Programme) |
| அ.ஐ.நா.உ.ஆ. | அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் (United Nations High Commissioner for Refugees) |

## அத்தியாயம் 1: ஆணைக்குழு

# ஆணைக்குழு

1.1 ஆணைக்குழுவின் மேலோட்டம்
1.1.1 தொலைநோக்கு
1.1.2 செயற்பணி
1.1.3 உள்மையப் பெறுமதிகள்
1.1.4 ஆணைக்குழுவின் சின்னம்
1.2 ஆணையின் தன்மை மற்றும் நோக்கெல்லை
1.3 தாபனரீதியிலான கட்டமைப்பு

# 01 ஆணைக்குழு

## 1.1 ஆணைக்குழுவின் மேலோட்டம்

### 1.1.1. தொலைநோக்கு

அனைவருக்கும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதும், சட்டத்தின் ஆட்சியை ஊக்குவித்துப் பாதுகாப்பதுமே எமது தொலைநோக்காகும்.

### 1.1.2. செயற்பணி

சகலருக்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதையும், மேம்படுத்துவதையும் நோக்கி பணியாற்றுகின்ற சகல பயனுரித்தாளர்களின் ஒருங்கிணைப்புடனும், ஒத்துழைப்புடனும் இலங்கையின் பிரஜைகளுக்கு இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீது விசேட வலியுறுத்தலொன்றுடன், உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளின் தரங்களுக்கும், கோட்பாடுகளுக்கும், சட்டத்திலும், கொள்கையிலும் மற்றும் நடைமுறையிலும் சகலருக்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதுடனும், மேம்படுத்துவதுடனும் ஊடாக, இலங்கையில் சிறந்த மனித உரிமைகள் கலாசாரமொன்றை விருத்திசெய்வதே எமது செயற்பணியாகும்.

### 1.1.3. உள்மையப் பெறுமதிகள்

- மனித கௌரவத்திற்கு மரியாதை
- பரலாக்கத்திற்கு மரியாதை
- சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மை
- சமாதானம், உண்மை மற்றும் நீதி
- சுதந்திரம்
- பொறுப்புக்கூறுதல்
- சேவை
- பணிவு
- நேர்மை
- ஒளிவுமறைவின்மை

### 1.1.4. ஆணைக்குழுவின் சின்னம்

தேசிய மட்டத்தில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் பொறுப்பினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சின்னம் வெளிப்படுத்துகின்றது. மனிதப் பிறவியினரின் உயிர்த்துடிப்பினையும், ஆக்கத்திறனையும் நீல நிறம் பிரதிபலிக்கின்றது. பாதுகாப்பினையும், பாதுகாப்புக்கான நடவடிக்கை எடுத்தலையும் இரு கைகள் பிரதிபலிக்கின்றன. புவியின் தூரத்திலான மூலைகளினுள் மனித உரிமைகளின் பரவலையும், சர்வதேச மட்டத்தில் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பினையும் பூகோளம் பிரதிபலிக்கின்றது. தேசிய மட்டத்தில் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான அவசியத்தை இலங்கையின் தேசப்படம் பிரதிபலிக்கின்றது. சகலருக்கும் மனித உரிமைகள் பாதுகாப்பு சமமாக வழங்கப்பட வேண்டும் என்பதை ஒரு பெண்ணினதும், ஆணினதும் மற்றும் சிறுவனினதும் உருவங்கள் பிரதிபலிக்கின்றன.

## 1.2 ஆணையின் தன்மை மற்றும் நோக்கெல்லை

நாட்டின் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் தாபிக்கப்பட்ட ஒரு சுதந்திரமான ஆணைக்குழுவே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவாகும். இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளையிட்டு ஆணைக்குழு அக்கறை கொண்டுள்ளதுடன், இந்தக் கடப்பாடுகளுக்கு நாடு கட்டுப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கும் பாடுபடுகின்றது.

1996இன் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தினால் (சட்டம்) 1996இல் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இ.ம.உ.ஆ.கு.இன் சட்ட அடிப்படையையும் மற்றும் செயற்பாட்டிலான கோட்பாடுகளையும் சட்டம் குறித்துரைக்கின்றது. இலங்கையின் அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தின் கீழ், இ.ம.உ..ஆ.கு. ஒரு அட்டவணைப்படுத்தப்பட்ட ஆணைக்குழு ஒன்றாகும். ஆனால், அது அரசியலமைப்பினால் முறைமையாகத் தாபிக்கப்பட்டதொன்று அல்ல. அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரையின் மீது ஜனாதிபதியினால் ஆணைக்குழுவின் தவிசாளரும் மற்றும் உறுப்பினர்களும் நியமிக்கப்படுகின்றனர். பாராளுமன்றத்திற்கு ஆணைக்குழு பதில் கூறத்தக்கதாகும்.

அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் ஆகியனவற்றைப் பொறுத்தளவில், ஆணைக்குழுவின் நியாயாதிக்கத்தை சட்டம் அங்கீகரித்துள்ளது. இலங்கையின் ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் IIIஇல் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள சில சிவில் மற்றும் அரசியல் உரிமைகளும் அத்துடன் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளும் அடிப்படை உரிமைகளாகும். ‘‘சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தம் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தம் ஆகியவற்றினால் பிரகடனப்படுத்தப்பட்டதும், அங்கீகரிக்கப்பட்டதுமான உரிமையாக’’ சட்டத்தில் மனித உரிமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவ்வாறாக, தேசிய தராதரங்கள் சர்வதேச சட்டத்துடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கின்றது.

ஆணைக்குழுவின் நியதியாக்கப் பணிகள் (சட்டத்தின் பிரிவு 10இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு) வருமாறு:

- அடிப்படை உரிமைகள் தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துகின்றதும் அத்துடன் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்றதும் மற்றும் அவற்றை அனுசரிக்கின்றதுமான நோக்கமொன்றுடன் நடைமுறைகள் தொடர்பில் விசாரித்தலும், புலனாய்வு செய்தலும்.
- அடிப்படை உரிமை மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை என்பன தொடர்பிலான முறைப்பாடுகளையிட்டு விசாரணை செய்தலும், புலனாய்வு செய்தலும் அத்துடன் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்படும் ஏற்பாடுகளுக்கிணங்க மத்தியஸ்தம் மூலமும், இணக்கத்தின் மூலமும் அவற்றைத் தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்தலும்.
- அடிப்படை உரிமைகளை மேம்படுத்துவதையும், பாதுகாப்பதையும் முன்னெடுத்துச் செல்வதில் சட்டவாக்க மற்றும் நிர்வாகப் பணிப்புரைகளையும், நடைமுறைமைகளையும் வகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதலும், உதவுதலும்.
- தேசியச் சட்டங்களும், நிர்வாக நடைமுறைகளும் உள்ளதை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளைச் செய்தல்.
- மனித உரிமைகள் துறையில் பொருத்தணைகளுக்கும், வேறு சர்வதேசச் சாதனங்களுக்கும் ஒப்புதளிப்பதற்கான அல்லது இசைவதற்கான அவசியத்தின் மீது அரசாங்கத்திற்கு பரிந்துரைகள் செய்தல் அத்துடன்,
- மனித உரிமைகளின் விழிப்பியலையும், கல்வியையும் மேம்படுத்தல்.

நியதியாக்கப் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருவனவற்றுக்கு (சட்டத்தின் பிரிவு 11இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு) இ.ம.உ.ஆ.கு. அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

- அடிப்படை உரிமைகளின் ஏதேனும் மீறலை அல்லது உடனடியான மீறலை புலனாய்வு செய்தல்.

- ஆணைக்குழுவினால் அவற்றுக்கு ஒப்படைக்கப்படுகின்ற ஆணைக்குழுவின் அத்தகைய அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமானது என அது கருதுகின்றவாறு, மாகாண மட்டத்தில் அத்தகைய எண்ணிக்கையிலான உப-குழுக்களை நியமித்தல்.

- ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னால் அத்தகைய நீதிமன்றத்தின் அனுமதியுடன் விசாரணையிலுள்ள அடிப்படை உரிமைகளின் மீறலுக்கு அல்லது உடனடியான மீறலுக்கு தொடர்பான ஏதேனும் விசாரணைகளில் தலையீடு செய்தல்.

- அவர்களின் தடுத்துவைக்கும் இடங்களின் கிரமமான சோதனையின் மூலம் ஒன்றில் நீதித்துறைக் கட்டளையொன்றினால் அல்லது வேறு வகையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களின் சேமநலனைக் கண்காணித்தலும்,

அவர்களது தடுத்து வைத்தல் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு அவசியமாக விளங்கக்கூடிய அத்தகைய பரிந்துரைகளைச் செய்தலும்.

- மீஉயர் நீதிமன்றத்தினால் அதற்கு அனுப்பப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் மீஉயர் நீதிமன்றத்தினால் எடுக்கப்படுவதற்காக பணிப்புரைக்கப்பட்டுள்ளவாறு அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல்.

- நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம், மனித உரிமைகளின் ஆராய்ச்சியைப் பொறுப்பேற்றல் அத்துடன் விழிப்பியலை மேம்படுத்தல் அத்துடன் அத்தகைய ஆராய்ச்சியின் முடிவுகளை பரப்புதல் மற்றும் பங்கிடுதல்.

- சட்டத்தின் பிரிவு 14இன் கீழ் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்றைச் செய்வதன் மூலம், அவரினால் நியாயபூர்வமான விதத்தில் ஏற்படுகின்ற செலவினங்களை நிறைவேற்றுவதற்கு போதுமானதாகவுள்ள அத்தகைய தொகையைக் கொண்ட பணத்தை மனக்குறையைக் கொண்ட நபர் ஒருவருக்கு அல்லது மனக்குறையைக் கொண்ட நபரொருவரின் சார்பாக செயற்படும் நபரொருவருக்கு வழங்குதல்.

- அதன் பணிகளின் நிறைவேற்றத்திற்கு அவசியமான அல்லது உகந்த சகல அத்தகைய வேறு விடயங்களைச் செய்தல்.

## 1.3 தாபனரீதியிலான கட்டமைப்பு

ஆணைக்குழு 154 பதவியணி உறுப்பினர்களுடன் செயற்படுகின்றது. அது விசாரணைகள் மற்றும் புலனாய்வுகள், கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் கண்காணித்தல் அத்துடன் நிருவாகம் மற்றும் நிதி என்றவாறு 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவசியப்பட்ட பணியாளரை ஆட்சேர்ப்பதற்கான நிலையொன்றில் ஆணைக்குழுவுக்கு விரைவிலேயே சர்வதேச உறவுகள் மீது பிரிவொன்று அமைக்கப்படும். மேலதிகமாக, அதன் பணிகளை மேற்கொள்வதற்காக 10 பிராந்திய அலுவலகங்களையும் (அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கல்முனை, கண்டி, மாத்தறை, திருகோணமலை மற்றும் வவுனியா), ஆறு உப அலுவலகங்களையும் (கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, நுவரெலியா பொலன்னறுவை மற்றும் புத்தளம்) கொண்டுள்ளது (பார்க்க: பிற்சேர்க்கை 1) ஒவ்வொரு பிரிவும் பணிப்பாளர் ஒருவரினால் தலைமைவகிக்கப்படுவதுடன், ஒவ்வொரு பிராந்திய அலுவலகமும் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் ஒருவரினால் தலைமை வகிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பிரிவினையும் மற்றும் பிராந்திய அலுவலகங்களையும் தவிசாளர் அல்லது ஓர் ஆணையாளர்/ ஆணையாளர்கள் மேற்பார்வை செய்கின்றார்கள்.


தவிசாளர்
ஆணையாளர்கள்
செயலாளர்
மேலதிகச் செயலாளர்
உள்ளகக் கணக்காய்வு
பணிப்பாளர் I & I
பணிப்பாளர் Ed & SP
பணிப்பாளர் R & M
பணிப்பாளர் A & F
பணிப்பாளர் IR
பிரதிப் பணிப்பாளர்
பிரதிப் பணிப்பாளர்
பிராந்திய இணைப்பாளர்
பிரதிப் பணிப்பாளர்
சட்ட அலுவலர்கள்
புலனாய்வு அலுவலர்கள்
சட்ட அலுவலர்கள்
புலனாய்வு அதிகாரி
சட்ட அலுவலர்கள்
கணக்காளர்
வலைப்பின்னல்
நிர்வாக அலுவலர்
நூலக மற்றும் ஆவண அலுவலர்
கல்வி அதிகாரி
ஆராய்சசி உத்தியோகத்தர்
முகாமைத்துவ உதவியாலர்கள் மற்றும் இளைய சிற்றூழியர்கள்
முகாமைத்துவ உதவியாலர்கள் மற்றும் இளைய சிற்றூழியர்கள்
முகாமைத்துவ உதவியாளர், சாரதி, இளைய ஊழியர்கள்
முகாமைத்துவ உதவியாலர்கள் மற்றும் இளைய சிற்றூழியர்கள்
முகாமைத்துவ உதவியாளர், சாரதி, இளைய ஊழியர்கள்

## அத்தியாயம் 2

# மதிப்பாய்வில் உள்ள ஆண்டு

**2.1. முக்கியமான சாதனைகள்**

2.1.1 புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள்
2.1.2 வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்கள்
2.1.3 தாபனரீதியிலான முன்னேற்றங்கள்
2.1.4 உபாயத் திட்டம்

**2.2. அரசாங்கத்திற்குப் பரிந்துரைகள்**
**2.3. கொள்கைச் சீர்திருத்தத்திற்கு வேறு ஆதரித்துவாதாடுதல்**
**2.4. ஐ.நா. அமைதிகாப்பவர்களாகப் பணியாற்றுவதற்கு இலங்கையின் இராணுவ ஆளணியினரைத் தணிக்கை செய்தல்**
**2.5. சவால்கள்**

# 02 மதிப்பாய்வில் உள்ள ஆண்டு

## 2.1 முக்கியமான சாதனைகள்

இந்த அத்தியாயம் 2016க்கான ஆணைக்குழுவின் முக்கியமான சாதனைகளின் சிலவற்றின் சாராம்சமொன்றை வழங்குகின்றது. இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் விபரங்கள் பின்தொடரவுள்ள அத்தியாயங்களிலும் அத்துடன் பிற்சேர்க்கைகளிலும் வழங்கப்பட்டுள்ளன.

### 2.1.1 புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள்

2016ஆம் ஆண்டின் போது, அதன் தனிப்பட்ட முறைப்பாடுகள் பொறிமுறையினதும் மற்றும் அதன் சொந்த இயக்கத்திலான நடவடிக்கையினதும் ஊடாக மக்களின் பாரியளவிலான எண்ணிக்கையொன்றுக்கு ஆணைக்குழு உதவியளித்தது. அது புலனாய்வு மற்றும் விசாரணை நடைமுறையைச் சீர்படுத்துவதற்கு முறைமைகளை அறிமுகப்படுத்தியதுடன், சீர்திருத்தங்களை வசதிப்படுத்துவதற்கு பணியாளர் பயிற்சி மீது நோக்கினையும் கொண்டிருந்தது. அவர்களுக்கு உதவுவதற்கு நன்கு முன்வைக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஆணைக்குழுவின் ஆணையினுள் வராத மனக்குறைகளுடன் நபர்களை வழிகாட்டுவதற்காக தீவிரமான ஆலோசனை முறைமையொன்றையும் ஆணைக்குழு அமுல்படுத்தியது. குறைகேள் அதிகாரியின் அலுவலகம் போன்ற நிபுணத்துவத்திலான ஆணைகளுடன் வேறு நிவாரணப் பொறிமுறை குறித்து அவர்கள் போதியளவு அறிந்திருக்காதபடியினால், ஆணைக்குழுவுக்கு சகல வடிவங்களைக் கொண்ட முறைப்பாடுகளைப் பொதுமக்கள் முன்வைப்பதாகக் குறித்துக்கொள்ளப்பட்டது.

மனித உரிமைகளின் மீறல்கள் தொடர்பில் பரிந்துரைகளின் அமுலாக்கத்தைப் பணித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு பரிந்துரைகளை வழங்குவதற்கு ஆணைக்குழுவின் ஆணைக்கு முற்றிலும் மாறான தன்மையில், மத்தியஸ்தினதும், சமாதானப்படுத்தலினதும் ஊடாக பிணக்குகளின் இணக்கப்பாட்டினை வசதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டது. இவை பிணக்குகளின் இணக்கப்பாட்டுக்கு விரைவான முறையொன்றையும் அத்துடன் குறைந்தளவு விரைவான நடைமுறையொன்றையும் வழங்குகின்றது. 2014க்கு முன்னரான தேங்கிக்கிடந்த விசாரணைகளைக் கையாள்வதற்காக, தேங்கிக்கிடந்தவை அப்புறப்படுத்தும் கருத்திட்டமொன்றையும் ஆணைக்குழு அமுல்படுத்தியது.

2016இல், 9,171 முறைப்பாடுகளை ஆணைக்குழு பெற்றதுடன், இது 2015இலிருந்து 425இனாலான அதிகரிப்பொன்றாகும். 2016இன் போது, 4,739 விடயங்கள் நடத்தப்பட்டன. 727 விடயங்களில் நிவாரணம் வழங்கப்பட்ட அதேவேளை, உரிமைகள் மீறல்களுக்கு உயர்ச்சியை வழங்காதவையாக 803 விடயங்கள் அடையாளங்காணப்பட்டதுடன், 408 விடயங்கள் ஆணைக்குழுவின் ஆணையினுள் வராதவையாக அயைடாளங்காணப்பட்டன. ஆணைக்குழு வெற்றிகரமாக 1,162 விடயங்களில் இணக்கங்களை மத்தியஸ்தம் செய்ததுடன், பொருத்தமான

நடவடிக்கைக்காக வேறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு 127 விடயங்களைப் பாரப்படுத்தியது. 2016இன் போது ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடுகளுக்கு பதிலிறுப்பாக 44 பரிந்துரைகளை ஆணைக்குழு வழங்கியதுடன், பலதரப்பட்ட பிரச்சனைகள் குறித்து 17 சொந்த இயக்க விசாரணைகளை ஆரம்பித்தது.

### 2.1.2 வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்கள்

2016இல், மனித உரிமைகள் பிரச்சனைகள் மீது விழிப்பியலை முன்னேற்றுமுகமாகவும் அத்துடன் பொதுமக்களை அறிவூட்டுமுகமாகவும் பலதரப்பட்ட வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்களை ஆணைக்குழு நடத்தியது. கற்கைகள், விரிவுரைகள், நடமாடும் சிகிச்சை நிலையங்கள், செயலமர்வுகள், பொது அணிவகுப்புகள் அத்துடன் ஊடக இயக்கங்கள் ஆகியனவற்றை வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கியிருந்தன.

சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூருகின்ற சர்வதேச தினமான ஜூன் 26 அன்று ஆரம்பிக்கப்பட்ட ***'சித்திரவதையை நிறுத்துக'*** என்பதே ஆணைக்குழுவினால் 2016இல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட மிகவும் முக்கியமான வெளிக்களத் திட்டமாகும். தலைமை அலுவலகத்தினதும் மற்றும் 10 பிராந்திய அலுவலகங்களினதும் ஊடாக நாட்டைச் சுற்றி பொதுத் திட்டங்களை ஆணைக்குழு நடத்தியது. சிவில் சமூகம், இளைஞர் குழுக்கள், முப்படைகள், பொலிஸ் ஆகியவற்றினதும் மற்றும் பாடசாலைச் சிறுவர்களினதும் பங்கெடுப்புடன் தலைமை அலுலவகத்தினால் தலைநகரத்தில் அணிவகுப்பொன்று ஒழுங்குபடுத்தப்பட்டது.



**சர்வதேச மகளிர் தினத்தின் நினைவுகூரலில்**
**'ஸ்டிக்கர்' இயக்கத்தை ஆரமபித்தல்**

உத்தியோகபூர்வ ஆதரவைக் குறித்துக்கொள்ளும் அணிவகுப்பில் அதிமேன்மைதங்கிய ஜனாதிபதியும் மற்றும் கௌரவ சட்டம், ஒழுங்கு அமைச்சரும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

சர்வதேச மகளிர் தினத்தின் நினைவுகூரலில் 'ஸ்டிக்கர்' இயக்கம் மற்றும் குறுகிய 'வீடியோ' போட்டி, பொதுமக்கள் உரிமைகள் குறித்து அவர்கள் மத்தியில் விழிப்பியலை உயர்த்துவதற்காக மனித உரிமைகள் மீது முக்கியமான செய்திகளைக் கொழும்பு நகரத்தைச் சுற்றி எடுத்துச் செல்லும் டிஜிட்டல்' பதாதைகளை நிறுவுதல், சிங்களத்திலும், தமிழிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வானொலி அலைவரிசைகளில் 'மனித உரிமைகள் துணுக்கு

இயக்கத்தை' ஆரம்பித்தல் ஆகியனவற்றை வேறு முக்கியமான வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கியிருந்தன.

சிறந்த சர்வதேச நடைமுறைகளின் பிரகாரம், அங்கவீனர்களுக்கு பொதுவான இடங்களைக் கவனத்திற்கெடுப்பதற்கும் அத்துடன் அடைதலைக் கண்காணிப்பதற்கும் அதன் நிறுவனரீதியிலான ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்காக அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றையும் இ.ம.உ.ஆ.கு. செய்துகொண்டது. அங்கவீனம் அடைதல் கருத்திட்டத்தை அமுல்படுத்தல் மீது பயனுரித்தாளர்களுடன் கலந்துரையாடல்களையும் ஆணைக்குழு ஆரம்பித்தது.

### 2.1.3 தாபனரீதியிலான முன்னேற்றங்கள்

2015இன் பிற்பகுதியில் தற்போதைய ஆணைக்குழு பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர், ஆணைக்குழுவின் செயற்றிறனையும், பதிலிறுப்பினையும் அதிகரிப்பதனை நோக்கி சுருதியூட்டப்பட்ட பெருமளவு தாபனரீதியிலான முன்னேற்றங்களை 2016 கண்டது. அந்த உட்கருத்தில், ஆசிய பசுபிக் அரங்கின் ஆதரவுடன் இ.ம.உ.ஆ.கு.இன் பணியைத் திட்டமிடுவதற்கும், முன்னுரிமைப்படுத்துவதற்கும் 2016 ஜனவரியில் உயர் மட்டக் கலந்தாய்வொன்று நடத்தப்பட்டது. அதேவேளை, இ.ம.உ.ஆ.கு.இன் ஆற்றலளவின் முன்னேற்றம் மீது கொள்கையொன்றும் அத்துடன் தகவல் தொழில்நுட்பம் மீது இ.ம.உ.ஆ.கு. கொள்கையொன்றும் ஆணைக்குழுவின் நிறுவனம்சார் பொறிமுறையைப் பலப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டன.

கரிசனையைக் கொண்ட மனித உரிமைகள் பிரச்சனைகளை உயர்த்துவதற்கும் அத்துடன் தீர்வுக்கும், நடவடிக்கைக்கும் தொடர்பான அரசாங்கத்தின் சம்பந்தப்பட்டவர்களுக்கு இப் பிரச்சனைகளை வழிகாட்டுவதற்கும் சிவில் சமூகத்திற்கு அரங்கொன்றை வழங்கும் குறிக்கோளுடன் இ.ம.உ.ஆ.கு.இன் 10 பிராந்திய அலுவலகங்களில் அரசாங்க அலுவலகங்களைக் கொண்ட பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுவொன்றையும் அத்துடன் சிவில் சமூகத் தாபனங்களின் பிராந்திய ஒருங்கிணைத்தல் குழுவொன்றையும் தாபிப்பதற்கு ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்தையும் ஆணைக்குழு பணித்தது. பிராந்தியங்களில் இ.ம.உ.ஆ.கு.க்கு தொடர்பான பிரச்சனைகளைக் கவர்வதற்கும் அத்துடன் பிரச்சனைகளுக்கு பயனுள்ளதாகப் பதிலிறுப்பதற்கு ஆணைக்குழுவை அனுமதிப்பதற்கும் பொறிமுறை வெற்றியை நிரூபித்துள்ளது.

### 2.1.4 உபாயத் திட்டம்

2017-2019 இ.ம.உ.ஆ.கு. உபாயத் திட்டத்தின் உள்மையத்தை அமைக்கும் உபாய நோக்குத் துறைகளை அடையாளங்காணும் நோக்கமொன்றுடன் பயனுறுரித்தாளர்களுடன் கூட்டங்களையும், உசாவுகைகளையும் இ.ம.உ.ஆ.கு. ஆரம்பித்தது. உபாயத் திட்டமிடல் மீது ஆணைக்குழுவின் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு செயலமர்வொன்றை ஆணைக்குழு நடத்திய அதேவேளை, உபாயத் திட்டமிடலில் உள்ளடக்கப்படுவதற்காக இ.ம.உ.ஆ.கு.இன் எதிர்காலச் செயற்பாடுகள் மீது அவர்களது கருத்துக்களையும் மற்றும் எண்ணங்களையும் பெறுவதற்காக சகல மாகாணங்களிலும் உள்ள பணியாளருடனும், அரசாங்க

அதிகாரிகளுடனும், சிவில் சமூகத் தாபனங்களுடனும் அத்துடன் ஐ.நா. பிரதிநிதிகளுடனும் பெருமளவு உசாவுகைகளையும் அது நடத்தியது. மேலும், அக்கறையைக் கொண்ட தரப்புக்களிடமிருந்தும், பிரஜைகளிடமிருந்தும் இ.ம.உ.ஆ.கு. இணையதளத்தின் ஊடாக கருத்துக்களும், ஆலோசனைகளும் கோரப்பட்டன. 2017இல் அமுல்படுத்தப்படுவதற்காக 2016 செப்ரெம்பரில் உபாயத் திட்டம் முடிவாக்கப்பட்டது. இந்த நடைமுறை ஆணைக்குழுவுக்கு மிக உதவியளித்தது.

## 2.2 அரசாங்கத்திற்குப் பரிந்துரைகள்

சட்டத்தின் பிரிவுகள் 10(இ) மற்றும் 10(ஈ) ஆகியவற்றின் பிரகாரம், அடிப்படை உரிமைகளின் மேம்படுத்தலினதும் மற்றும் பாதுகாப்பினதும் சட்டவாக்கத்தினையும், நிருவாகப் பணிப்புரைகளையும் மற்றும் நடைமுறைகளையும் வகுத்தமைப்பதிலும், அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கும், உதவுவதற்கும் அத்துடன் சர்வதேச மனித உரிமைகள் மாதிரிகளினதும், தரங்களினதும் பிரகாரம் தேசிய சட்டங்களும், நிருவாக நடைமுறைகளும் உள்ளதை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளைச் செய்வதற்கும் ஆணைக்குழு வேண்டப்படுகின்றது. 2016இன் போது, அதன் தலையீட்டினை வேண்டுகின்றதாக ஆணைக்குழு நோக்குகின்ற கரிசனையைக் கொண்ட மனித உரிமைகள் பிரச்சனைகள் மீது அரசாங்கத்திற்கு பெருமளவு பரிந்துரைகளை இ.ம.உ.ஆ.கு. செய்தது.

- **அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கு முன்மொழிவுகள்**

அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்காக அதன் முன்மொழிவுகளைக் கௌரவ பிரதமர், கௌரவ சபாநாயகர் ஆகியோருக்கும் மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொது பிரதிநிதித்துவக் குழுவுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சமர்ப்பித்தது. எதிர்கால அரசியலமைப்பொன்றில் உரிமைகளின் உறுதியான சட்டமூலமொன்றை உள்ளடக்குவதற்கான பரிந்துரையை வரவேற்கின்ற அதேவேளை, அதிகாரங்களையும் மற்றும் சரிபார்த்தல்களையும், சமநிலைகளையும் புறம்பாக்குகின்ற உறுதியான முறைமையொன்றுக்கும் அத்துடன் பொது நுண்ணாய்வு ஆட்சியின் பலமான ஒழுங்குவிதியொன்றுக்கும் உத்தரவாதமளிக்கின்ற சீர்திருத்த நடைமுறையைக் கரிசனைக்கு எடுக்கப்பட வேண்டிய இரு முக்கியமான பரிமாணங்களுக்கான கவனத்தினை ஆணைக்குழு ஈர்த்தெடுத்தது. மேலதிகமாக, குறித்துரைக்கப்பட்ட நேரச் சட்டமொன்றினுள் இயலத்தக்க சட்டவாக்கத்தையும், இ.ம.உ.ஆ.கு.க்கு அரசியலமைப்பு அங்கீகாரத்தையும் முன்வைக்கின்ற கடப்பாடொன்றுடன் சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்கின்றதும் மற்றும் அரசியலமைப்பனைக் கட்டியெழுப்புவதற்கும் அத்துடன் அரசியலமைப்பு ஆட்சியை சட்டபூர்வமாக்குவதற்கும், அடிப்படையிலான முக்கியத்துவத்தைக் கொண்ட பொறிசார்ந்த அடைதல்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தாபனரீதியிலான அரசியலமைப்புக் கோட்பாடுகளை ஆணைக்குழு முன்மொழிந்தது.

- **இலங்கையில் மரண தண்டனையை நீக்குவதற்கான பரிந்துரை**

மனித உரிமைகள் கோட்பாடுகளுடனும், பெறுமதிகளுடனும் அதிகளவு மனிதத்தன்மையிலான சமூக இணக்கமொன்றுக்கு இலங்கையின் அர்ப்பணிப்புக்கு அமைவாக, இலங்கையில் மரண தண்டனையை நீக்குவதற்கான பரிந்துரையொன்று வழங்கப்பட்டது. வாழ்க்கைக்கான உரிமை மற்றும் கொடூரமானதும், மனிதத்தன்மையற்றதுமான தண்டனையிலிருந்து சுதந்திரம் ஆகியன உட்பட பெருமளவு மனித உரிமைகளை மரண தண்டனை பாரதூரமாக மீறுவதுடன், மிகக் கடுமையானதும், மாற்ற முடியாததுமான தண்டனையொன்று என்பதுடன், குற்றத்தினைத் தடுக்கக்கூடியதொன்றாகப் பயனுறுதியற்றது என்றும் வளர்ச்சியுறும் உலகளாவிய அங்கீகாரத்தின் பின்னணியில் மரண தண்டனையை நீக்குக்கு கரிசனைக்கெடுக்குமாறு அரசாங்கத்தை ஆணைக்குழு வலியுறுத்தியது.

கொடூரமானதும், மனிதத்தன்மையற்றதும் அத்துடன் தரத்தைக் குறைக்கின்றதுமான தண்டனைக்கு மரண தண்டனை உட்படுவதுடன், மனித வாழ்க்கையின் புனிதத்தன்மைக்கு மரியாதையளிக்கவும் தவறுகின்றது, அத்துடன் வாழ்க்கைக்கான வெளிப்படுத்தப்பட்ட அடிப்படையிலான உரிமை இல்லாதபோதிலும், அது இலங்கையின் 1978 அரசியலமைப்பில் சுட்டிச்சொல்லப்படவில்லை என இலங்கையின் மீஉயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது என்ற நோக்கினை ஆணைக்குழு கொண்டுள்ளதாகப் பரிந்துரை மேலும் குறிப்பிட்டுள்ளது.

ICCPR இரண்டாவது விருப்பிலான நடப்பொழுங்கினை இலங்கை ஏற்றுக்கொள்வதையும் அத்துடன் மரண தண்டனையை உடனடியாக நீக்குவதையும் பரிந்துரைக்கின்ற அதேவேளை, ஒவ்வொரு குற்றத்தின் பாரதூரத்தன்மைக்கு இணங்கும் விதத்தில் சிறைத்தண்டனையின் காலங்களுடன் மரண தண்டனை பதிலீடு செய்யப்பட வேண்டும் என்றும் இ.ம.உ.ஆ.கு. பரிந்துரைத்தது.

- **எதிர்கால அரசியலமைப்பு உரிமைகள் சட்டமூலத்தின் பொருளாதார, சமூக மற்றும் கலாசர உரிமைகளை ஒன்றிணைப்பதற்கான அவசியம்**

முழுமையாகப் பாதிக்கப்பட்ட உரிமைகளாக எதிர்கால அரசியலமைப்பு உரிமைகள் சட்டமூலத்தின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை (பொ.ச.க. உரிமைகள்) ஒன்றிணைப்பதற்கான அவசியம் மீது பொதுக் கூற்றொன்றை ஆணைக்குழு வழங்கியது. உரிமைகளின் பகுக்க முடியாத தன்மையின் கோட்பாட்டின் மீறலில் பொ.ச.க. உரிமைகளின் உள்ளடக்கத்தைத் தடுப்பதற்கு சில பிரிவினரினாலான முயற்சிகள் மீது அதன் ஆழ்ந்த கரிசனையை இ.ம.உ.ஆ.கு. அறிவித்தது. கல்விக்கான உரிமை, ஆரோக்கியத்தினதும், வீடமைப்பினதும் போதியளவு தரம் மற்றும் எதிர்கால அரசியலமைப்பில் சரீர உழைப்பின் நியாயமான நிலைமைகள் போன்ற அரசியலமைப்பிலான உரிமைகளின் பாதுகாப்பினைக் கோருகின்ற பொதுசன உசாவுகை நடைமுறையில் பொதுசனத்தினால் தெளிவாக உச்சரிக்கப்படுகின்ற கருத்துக்களை அரசியலமைப்பினை ஆக்கும் நடைமுறை இன்றியமையாத விதத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என உண்மைக்கான கவனமெடுப்பினை அது ஈர்த்தெடுத்தது. அவ்வாறு செய்வதற்கு தவறுதல், குறிப்பாக சர்வதேசப் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான ஒப்பந்தத்தின்

(1966) கீழ், இலங்கையினால் பொறுப்பேற்கப்பட்ட சட்டபூர்வமான கடப்பாடுகளின் மீறலொன்று என ஆணைக்குழு கருத்தினைக் கொண்டிருந்தது. இது மறுதலையாக இலங்கையின் மேம்பாடடையும் மனித உரிமைகள் சாதனையைப் பாதிக்கும் என்பதுடன், எதிர்கால அரசியலமைப்பில் பொதுசன தன்னம்பிக்கையைப் பாரதூரமாக குறைத்து மதிப்பிடும் எனவும் அது மேலும் குறிப்பிட்டது.

- **தமது தனிப்பட்ட ஆவணங்களில் தமது பால்நிலையை மாற்றுவதற்கு மாற்றுப்பாலினத்தவரை இயலச்செய்வதற்கான பரிந்துரை**

ஆணைக்குழுவின் பரிந்துரையொன்றுக்குப் பின்தொடராக, தேசிய ஆளடையாள அட்டை போன்ற தமது தனிப்பட்ட ஆவணங்களில் தமது பால்நிலையை மாற்றுவதற்கு மாற்றுப்பாலினத்தவரை இயலச்செய்வதற்கான சுற்றறிக்கையொன்றைச் சுகாதார அமைச்சு விடுக்கவுள்ளது. சுகாதார அமைச்சு, பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றுடனான பரந்த-அடிப்படையினை உசாவுகைகளின் விளைவொன்றாக ஆணைக்குழுவினால் விருத்திசெய்யப்பட்ட பால்நிலை அங்கீகாரச் சான்றுப்பத்திரம் மீதான அடிப்படையில் பிறப்புச் சான்றுப்பத்திரத்தில் பால்நிலையையும், பெயரையும் மாற்றுவதற்கு சகல பதிவாளர்களையும் அறிவுறுத்தும் சுற்றறிக்கையொன்றைப் பதிவாளர் நாயகம் கூட விடுத்திருந்தார்.

- **1979இன் 48ஆம் இலக்கப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (தற்காலிகமான ஏற்பாடுகள்) கீழ் கைது செய்தல் மற்றும் கைது செய்யப்பட்ட நபர்களைத் தடுத்துவைத்தல் மீதான அறிவுறுத்தல்களின் ஏற்றுக்கொள்ளல்**

1979இன் 48ஆம் இலக்கப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (தற்காலிகமான ஏற்பாடுகள்) கீழ் கைது செய்தல் மற்றும கைது செய்யப்பட்ட நபர்களைத் தடுத்துவைத்தல் ஆகியன மீதான அறிவுறுத்தல்களைப் பகிரங்க அறிக்கையொன்றினால் மனித உரிமைகள் ஆணைக்குழு வரவேற்றது. இது தொடர்பில், அதன் அதிகாரங்களையும், பணிகளையும் மற்றும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கான அறிவுறுத்தல்கள் ஆணைக்குழுவை வசதிப்படுத்தும் என்றும், அதிவிசேட சட்டங்களின் கீழ் கைது செய்யப்படுவதற்கும், தடுத்துவைக்கப்படுவதற்கும் உட்படுகின்ற நபர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பினை மீள்வலுவூட்டும் என்றும் ஆணைக்குழு நம்புகின்றது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கும், சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு ஒழுகி நடப்பதற்குமான அரசாங்கத்தின் தீர்மானத்தை ஆணைக்குழு வரவேற்றது. அவசரகால நிலைமைகளின் போது, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அவசியத்தை அங்கீகரிப்பது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு புதுமையானதல்ல என்பதுடன், அது இலங்கைச் சட்டவியலில் காணப்படுகின்றது என அது மேலும் கருத்தினைக் கொண்டிருந்தது. இந்தப் பின்புலத்திற்கு எதிராக, பயங்கரவாதத்தின் வரைவிலக்கணம், தடுப்புக்காவல் கட்டளைகளின் நீதித்துறை மதிப்பாய்வு, நியாயமான விசாரணையொன்றுக்கான உரிமை, மரண தண்டனையைப் பயன்படுத்தாமை, சுதந்திரமான சட்டப் பிரதிநிதிக்கான அடைதல் போன்ற ஏதேனும் எதிர்காலத் தேசியப் பாதுகாப்புக்கு உள்மையமாக விளங்குகின்றவாறு, பயங்கரவாதத்தை எதிர்க்கின்ற அதேவேளை, மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவது ஆகியன மீதான ஐ.நா.

விசேட அறிக்கையிடுனரினால் அடையாளங்காணப்பட்டுள்ள சில அம்சங்களை ஆணைக்குழு பரிந்துரைத்தது.

- **சட்டத்தினதும், ஒழுங்கினதும் மீது பாராளுமன்ற உப-குழுவுக்கான முன்மொழிவுகள்**

சட்டத்தினதும், ஒழுங்கினதும் மீது பாராளுமன்ற உப-குழுவுக்கான அதன் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்து, பொதுசனப் பாதுகாப்பு ஆட்சி அத்தியாவசியமாக உள்ள அதேவேளை, அது இலங்கையின் மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு அமைவாக இருக்க வேண்டும் என இ.ம.உ.ஆ.கு. வலியுறுத்தியது. மக்களைப் பாதுகாப்பதே பொதுசனப் பாதுகாப்பு ஆட்சியொன்றின் பிரதான நோக்கம் என்பதுடன், எனவே மக்களின் சிறந்த அக்கறைகளுக்கு சேவையாற்றும் தன்மையொன்றில் செதுக்கப்பட வேண்டும் என்ற நம்பிக்கையை ஆணைக்குழு கொண்டிருந்ததுடன், தென் ஆபிரிக்க அரசியலமைப்பின் உறுப்புரை 198இல் குறித்துரைக்கப்பட்ட தேசியப் பாதுகாப்பினை ஆட்சிப்படுத்துகின்ற கோட்பாடுகளுக்கு உப-குழுவின் கவனத்தையும் ஈர்த்தெடுத்தது.

மனித உரிமைகள் குழுவின் சட்டவியல், அவசரகால நிலையொன்றில் மனித உரிமைகள் மாதிரிகளின் குறைந்தபட்ச தரங்கள் மற்றும் ஐஊஊஊீசுஇல் மட்டுப்படுத்தலினதும், சிறுமைப்படுத்தலினதும் மீதான சேராகுஸா கோட்பாடுகள் ஆகியன மீது ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அடிப்படையைக் கொண்டிருந்தன. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள் என்னும் போது மட்டுமே பிரகடனப்படுத்தப்பட வேண்டிய அவசரநிலையின் பிரகடனத்தினதும், நீடிப்பினதும் மீது பரிந்துரைகள் வலியுறுத்தின. இது அவசரகால நிலையொன்றின், அவசரகால ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் அத்துடன் அவசரகால நிலைமைகளின் போது உரிமைகளின் சிறுமைப்படுத்தல் மீது உரிமைகள் வரைவுப் பட்டயத்தின் (2009) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் ஆகியவற்றின் பிரகடனமொன்றில், நீதித்துறை மதிப்பாய்வுக்கு உத்தரவாதமளிக்கின்ற தேவை மீது 'உண்மையான அல்லது உடனடியான நெருக்கடிநிலையின் அல்லது பொதுசன ஆபத்தின் புறநீங்கலான சூழ்நிலை' ஒன்றாகும். பொதுசனப் பாதுகாப்புக்கு பிரயோகிக்கத்தக்க சட்டவாக்க ஆட்சியை சீர்திருத்தும் நோக்கத்திற்கு பொதுசன பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின் மதிப்பாய்வினையும் ஆணைக்குழு பரிந்துரைத்தது.

- **வழக்கறிஞர் ஒருவருக்கான அடைதலுக்கு சந்தேக நபர்களின் உரிமைகளை மட்டுப்படுத்தும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் நியதிக்கு உத்தேசமான திருத்தம் தொடர்பில் கரிசனைகள்**

வழக்கறிஞர் ஒருவருக்கான அடைதலுக்கு சந்தேக நபர்களின் உரிமைகளை மட்டுப்படுத்தும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் நியதியைத் திருத்துவதற்காக முன்மொழிந்து 2016 ஒகஸ்ட் 12 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டமூலம் பற்றிய கரிசனையை வெளிப்படுத்தி பிரதமருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எழுதியது (இது பின்னர் பகிரங்கப்படுத்தப்பட்டது). திருத்தத்தை மீளப்பெறுமாறும், தமது வழக்கறிஞர்களுக்கான அடைதலைக் கொண்டிருப்பதையும்,

சந்தேக நபர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதையும் அத்துடன் அதிகரிப்பதையும் தொடருமாறும் இலங்கை அரசாங்கத்திற்கு கடிதம் அழைப்புவிடுத்தது. இதைத் தொடர்ந்து, உத்தேசமான திருத்தம் மீது இலங்கை வழக்கறிஞர் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட மூடப்பட்ட கதவிலான கூட்டமொன்றிலும் ஆணையாளர்கள் பங்கெடுத்தனர்.

- **காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் (OMP)**

காணாமல்போனோர் பற்றிய அலுவலக (தாபிப்பு, நிருவாகம் மற்றும் பணிகளின் நிறைவேற்றம்) சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதைப் பகிரங்க அறிக்கையொன்றில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பாராட்டியதுடன், அலுவலகத்தைத் தாபிப்பதில் அதிகளவு கரிசனை வழங்கப்பட வேண்டிய ஒரு தொகையிலான முக்கியமான அம்சங்களையும் மீள்-வலியுறுத்தியது. சில முனைப்பான அம்சங்கள் வருமாறு: OMP தொடர்பில் பகிரங்கமாக இடப்படுகின்ற வதந்திகளை நீக்குவதற்கும் அத்துடன் தவறாக இட்டுச்செல்கின்றதும், செம்மையற்றதுமான தகவலை எதிர்ப்பதற்கும் பொதுசன விழிப்பியல் இயக்கமொன்றுக்கான அவசியம், பலமான நிறுவனமொன்றைக் கட்டியெழுப்புவதற்கும், தகுதிவாய்ந்ததும், தகைமைபெற்றதும் மற்றும் அர்ப்பணிப்பினைக் கொண்டதுமான பணியாளரைக் கேள்வுக்கெடுப்பதற்கும் அலுவலகத்தை அனுமதிக்கும் போதியளவு நிதிசார் மூலவளங்களை வழங்குதல், இலங்கையில் பன்மைத்தன்மையிலான தன்மையைப் பிரதிபலிப்பதற்காக OMPஇன் உறுப்புரிமைக்காக காணாமல்போனோர் OMPக்கான அடைதலையும் மற்றும் பொது உரித்துரிமையையும் மேம்படுத்துவதற்கு பிராந்திய அலுவலகங்களைத் தாபித்தல், குற்றப்பிரேரணை செய்ய முடியாத பண்புக்கூற்றுடன் நபர்களின் ஆட்சேர்ப்பு அத்துடன் அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட பணியாளருக்கு போதுமானதும், தொடர்ச்சியானதுமான பயிற்சி, உளநிலை-சமூக ஆதரவு, அவசியப்படுகின்றவர்களுக்கு அதே இடத்திலான உளநிலை-சமூக ஆதரவை வழங்குவதற்கு ஆளணியினரின் பிரசன்னம், வரவின்மையின் சான்றுப்பத்திரம் தொடர்பில் அவர்களது உரிமைகள் மீது காணாமல்போன குடும்பங்கள் மத்தியில் விழிப்பியலை உயர்த்துதல், சாத்தியவளமான பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் பாதுகாப்பு நடைமுறை மற்றும் போதுமானதும், நம்பகமானதுமான தரவு பதிவு செய்தல் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள்.

## 2.3 வேறு கொள்கைச் சீர்த்திருத்தங்களிற்கு ஆதரித்துவாதாடுதல்

- **கல்விக்கான உரிமை மீது**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினதும் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினதும் தவிசாளர்களினால் கைச்சாத்திடப்பட்ட பத்திரிகை வெளியீடு ஒன்றை அவை வெளியிட்டிருந்ததுடன், இதில் தனது தாயின் சுகாதார நிலைமையின் காரணமாக HIV/AIDS தொற்றப்பட்டுள்ளார் என்ற அடிப்படையின் மீது குளியாபிட்டியில் உள்ள இலுக்ஹேனவில் சம்போதி ஆரம்பநிலைப் பாடசாலைக்கு அனுமதி மறுக்கப்பட்ட 5 வயதைக் கொண்ட சிறுவரின் கல்விக்கான உரிமைக்கு

சம்பந்தப்பட்டவர்களினதும் மற்றும் பொதுமக்களின் உறுப்பினர்களினதும் கவனத்தை அவசரமாகக் கோரியிருந்தன. சிறுவரின் கல்விக்கான உரிமையை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை என பகிரங்க அறிக்கை வலியுறுத்தியதுடன், தாயுடன் சிறுவர் உருவாக்கியுள்ள பலமான பிணைப்பின் ஊடாக சிறுவரின் சிறந்த அக்கறைகளை நோக்குமாறு சமூகத்திற்கு அது அழைப்பு விடுத்திருந்தது. இந்தச் சூழ்நிலையில், சிறுவரின் நிறுவனரீதிப்படுத்தலாக கருதுவதை அறிக்கை மேலும் அதைரியப்படுத்தியதுடன், குடும்பத்தின் அந்தரங்கத்தன்மையையும் அத்துடன் தாயின் மருத்துவப் பதிவேடுகளுடன் இணைந்திருந்த இரகசியத்தன்மையையும் மதிக்குமாறு அரசியல் தலைவர்களையும், அதிகாரிகளையும் மற்றும் ஊடக நிறுவனங்களையும் கேட்டுக்கொண்டன.

- **அரசியலமைப்பின் உறுப்புரை 16 மீது**

இலங்கையின் 1978 அரசியலமைப்பின் உறுப்புரை 16இன் சீர்திருத்தம் மீது பலதரப்பட்ட பிரதிநிதித்துவங்களையும் அத்துடன் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளையும் கரிசனைக்கெடுத்து அதன் நிலையை பொது ஆட்சிப்புலத்தில் இ.ம.உ.ஆ.கு. முன்வைத்தது. அரசியலமைப்பின் மேலாண்மையின் கோட்பாட்டினை இலங்கையின் எதிர்கால அரசியலமைப்பு அங்கீகரிக்க வேண்டும் என அது பரிந்துரைத்தது. எனவே, சகல எழுதப்பட்டதும், வழக்கமானதுமான சட்டங்கள் இலங்கையின் அரசியலமைப்புடன் முரண்படுகின்ற அளவுக்கு செல்லுபடியற்றவையாகும்.

## 2.4 ஐ.நா. அமைதிகாப்பவர்களாகப் பணியாற்றுவதற்கு இலங்கையின் இராணுவ ஆளணியினரைத் தணிக்கை செய்தல்

ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் செயற்பாடுகளுக்கு பணியாற்றுவதற்குள்ள இராணுவ ஆளணியினரைத் தணிக்கை செய்வதைப் பொறுப்பேற்பதற்கு ஆணைக்குழுவின் சாத்தியக்கூறு குறித்து கலந்துரையாடுவதற்கு ஒரு தொடரைக்கொண்ட கூட்டங்களுக்கு 2016 ஜூனில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் இ.ம.உ.ஆ.கு. அழைக்கப்பட்டிருந்தது. நடைமுறையைப் பொறுப்பேற்பதற்கு ஆணைக்குழு உடன்பட்டதுடன், 2016 செப்ரெம்பரில் அதி மேன்மைதங்கிய ஜனாதிபதிக்கும் அதை அறிவித்திருந்தது. அமைதி காக்கும் துருப்புக்களைத் தணிக்கை செய்வதற்கான பொறுப்பு தேசிய நிறுவனமொன்று கையளிக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

## 2.5 சவால்கள்

2016ஆம் ஆண்டின் போது, ஆணைக்குழு முன்னேற்றத்தினைச் சாதித்த அதேவேளை, அது பெருமளவு சவால்களுக்கும் முகங்கொடுத்தது. அதன் ஆணையை

நிறைவேற்றுவதில் ஆணைக்குழுவின் பலத்தை அதிகரிக்குமுமகாக அது முனைந்த உள்ளகக் கட்டமைப்புக்களையும், நடைமுறைகளையும் சீர்திருத்துவதற்கு போதியளவு ஆதரவைப் புதிதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு சில தருணங்களில் திரட்ட முடியவில்லை. கட்டுக்கடங்காத அதிகாரவர்க்கதிற்குரிய நடைமுறைகளினால் ஆணைக்குழுவின் பணிக்கு தடையேற்பட்டதுடன், இது ஆணைக்குழுவின் சுதந்திரத்தின் மீது அத்துமீறியிருக்கலாம்.

நிருவாகச் சுதந்திரத்தின் பற்றாக்குறையானது எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் முன்னேற்றத்தைச் சாதிப்பதிலிருந்து ஆணைக்குழுவை மேலும் தடுத்தது. ஆட்சேர்ப்பு, புதிய பிராந்திய அலுவலகங்களைத் தாபித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஒரே மாதிரியாகப் பெறுதல் ஆகியன மீது மறுதலையிலான தாக்கமொன்றை அது கொண்டிருந்தது.

போதியளவு மனித மூலவளங்களின் பற்றாக்குறையின் காரணமாக, முறைப்பாடுகளுக்கான பதிலிறுப்புக்கு கூட தடையேற்பட்டது. அதன் ஆணையைப் பயனுறுதிவாய்ந்ததாக மேற்கொள்ளுமுகமாக போதியளவு நிதிசார், பௌதீக மற்றும் மனித வளங்களையும், அத்துடன் போதியளவு பணியாளர் பயிற்சியையும், நிபுணத்துவத்தையும் வழங்குவதன் மூலம் இ.ம.உ.ஆ.கு.ஐப் பலப்படுத்துவதற்கு இலங்கை மீதான தமது அறிக்கைகளில் பெருமளவு ஐ.நா. விசேட அறிக்கையிடுனர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாததினால் அது தொடர்ச்சியான கரிசனையொன்றாக விளங்கியதுடன், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அதன் ஆணையை நிறைவேற்றுவதில் ஆணைக்குழுவுக்கு சவாலொன்றையும் முன்வைத்தது. ஆணைக்குழுவின் பணிக்கு தடைகளாக இறுதியான நிர்ணயிப்புக்களும், பரிந்துரைகளும் அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு வினைப்படுத்தல் அதிகாரங்களின் இன்மையை நீதிபதிகளினதும், வழக்கறிஞர்களினதும் சுதந்திரம் மீதான விசேட அறிக்கையிடுனரினதும் மற்றும் சிறுபான்மையினர் மீதான விசேட அறிக்கையிடுனரினதும் அறிக்கைகள் முனைவுபடுத்தியதுடன், அவை பிரஜைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைகளின் பாரியளவிலான கவனத்தை நிறுவனங்கள் எடுப்பதை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்தைப் பரிந்துரைத்தன.

## அத்தியாயம் 3:

# புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள்

**3.1. மீள்பார்வை**
**3.2. உரிமைகளினால் தனிப்பட்ட முறைப்பாடுகளின் உதாரணங்கள்**
3.2.1. சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மை
3.2.2. பாதுகாவலிலான வன்முறை
**3.3. அதன் சொந்த இயக்க விசாரணைகள்**

# 03 புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள்

## 3.1 மீள்பார்வை

பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளை ஆணைக்குழு பெறுகின்ற அதேவேளை, அதன் சொந்தப் பிரேரணை (அதன் சொந்த இயக்க விசாரணைகள்) மீது அடிப்படை உரிமைகளின் மீறல்களை வெளிப்படுத்தும் பிரச்சனைகள் குறித்து சட்டத்தின் பிரிவு 14 ஊடாக ஆணைக்குழு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2016இன் ஆரம்பத்தில், முறைப்பாடுகளைக் கையாள்வதற்கு ஆணைக்குழு சிறந்த வகையில் பொருத்தமானதா என்பதை நிர்ணயிக்குமுகமாக அது பெறுகின்ற முறைப்பாடுகளை மிகவும் கடுமையாகத் தணிக்கை செய்வதற்கான கொள்கைத் தீர்மானமொன்றை இ.ம.உ.ஆ.கு. எடுத்தது. ஆணைக்குழு பெருவாரியிலான நிருவாகரீதியிலான நீதி தொடர்பான முறைப்பாடுகளுக்கு பதிலிறுப்பதில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஏனெனில் அத்தகைய முறைப்பாடுகள் நிவாரணத்திற்கு வேறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு முன்வைக்கப்பட முடியும். அதன் உள்மைய ஆணையின் நேர்மையையும் அத்துடன் மனித உரிமைகளின் மீறல்களின் தருணங்களில் நிவாரணத்தை வழங்குவதற்கு அதன் மூலவளங்களுக்கு வழியமைப்பதையும் ஆணைக்குழு பேணுவதை இது உறுதிப்படுத்தியது. இக் கொள்கையைப் பின்துரந்து, விரிவான ஆலோசனை முறைமையொன்றின் மீது அதன் அலுவலர்களை ஆணைக்குழு பயிற்றுவித்ததுடன், இந்த முறைமையானது ஆணைக்குழுவின் ஆணையினுள் இந்த முறைப்பாடுகள் முன்வைக்கப்பட முடியும் என்பதற்கு பொருத்தமான சம்பந்தப்பட்ட நிறுவனத்தை அடையாளங்காண்பதற்கு புலனாய்வு அலுவலர்களுக்கு உதவியது. தற்போது ஆணைக்குழு பொருத்தமான அரங்கு அல்ல என்றால் அவர்களது முறைப்பாடு முன்வைக்கப்படுவதற்கு பொருத்தமான நிறுவனம் மீது ஒவ்வொரு தனித்த முறைப்பாட்டாளரும் அறிவுறுத்தப்படுகின்றார்.

அதேவேளை, சுவிஸ் கூட்டாயத்தினால் நிதிப்படுத்தப்பட்ட கருத்திட்டமொன்றின் ஊடாக, 2014க்கு முன் தேங்கியிருந்த விசாரணைகளைக் கவனத்திற்கெடுப்பதற்காக புதிய அலுவலர்களை ஆணைக்குழு ஆட்சேர்த்தது. நேரகாலத்திலான தலையீடுகளை மேற்கொள்வதற்கும் அத்துடன் நிறுவனத்தின் பொதுசன தன்னம்பிக்கையை மீள்-கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதற்கும், ஆணைக்குழுவை இயலச்செய்வதற்கும் தேங்கிக்கிடந்த முறைப்பாடுகள் குறித்து செயற்திறனாகவும், விரைவாகவும் புலனாய்வு செய்வதற்கு ஆணைக்குழுவுக்கு கருத்திட்டம் வழங்கியது. நடைமுறையிலான முறைப்பாடுகள் மீது நடைமுறையிலான பதவியணி உறுப்பினர்கள் கவனத்தைச் செலுத்துவதையும் அதேவேளை, எதிர்காலத்தில் அத்தகைய தேக்கத்தைத் தவிர்ப்பதற்கு நடைமுறையிலான முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறையை ஆணைக்குழு மதிப்பாய்வதையும், பலப்படுத்துவதையும் அனுமதிப்பதே மேலதிகமான பதவியணி உறுப்பினர்களை ஆட்சேர்ப்பதற்கான நோக்கமாகும்.

- **புதிய பணியாற்றும் முறைகளின் அறிமுகம்**

விசாரணைகள் மற்றும் புலனாய்வுகள் பிரிவின் செயற்றிறனையும். பதிலிறுப்புத்தன்மையையும் அதிகரிக்குமுகமாக, புதிய பணியாற்றும் முறைகளை ஆணைக்குழு அறிமுகப்படுத்தி, அமுல்படுத்தியது. முதலாவது நடவடிக்கையொன்றாக, முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறையைச் சீர்படுத்தும் நோக்கத்துடன் முறைப்பாடுகளின் புதிய வகைப்படுத்தலொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

முறைப்பாடுகளை வழிகாட்டுவதற்காக விசாரணைகள் மற்றும் புலனாய்வுகள் பிரிவினுள் பதிய அலகுகள் தாபிக்கப்பட்டன. ஆணைக்குழுவுக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளுக்கு பயனுறுதிவாய்ந்ததாகவும், உடனடியாகவும் பதிலிறுப்பதற்கு அதை இயலச்செய்வதை உரிமைகளின் ஒவ்வொரு வகுதியையும் கையாளும் அர்ப்பணிக்கப்பட்ட அலகுகள் எதிர்பார்க்கப்பட்டன. அலகுகள் வருமாறு

- பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள்
- கல்வித் துறை முறைப்பாடுகள்
- சித்திரவதை/பாதுகாவலிலான வன்முறை
- பொது முறைப்பாடுகள் அலகு

மேலதிகமாக, பிரிவின் செயற்றிறனை அதிகரிப்பதற்கும், மீண்டும் சுருதிகூட்டும் விதத்தில் முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளை ஏற்றுக்கொள்வதற்கும் அத்துடன் நடத்துவதற்கும் புதிய தளக்கோலங்களும், வழிகாட்டல்களும் அறிமுகப்படுத்தப்படுவதுடன், பிரிவின் செயற்திறனை அதிகரிப்பதற்கு மீண்டும் உதவுகிறது.

- **கிடைத்த முறைப்பாடுகளின் புள்ளிவிபரங்கள்:**

2016இல், மொத்தத்தில் 9,171 முறைப்பாடுகளை இ.ம.உ.ஆ.கு. பெற்றது. இது முந்தைய வருடத்தில் கிடைத்த 8,949 முறைப்பாடுகளுடன் ஒப்பிடப்படுகின்றது. கிடைத்த முறைப்பாடுகளில் 20% தொகையிலான ஆகக்கூடுதலான எண்ணிக்கையைக் கொண்ட முறைப்பாடுகள் பாதுகாவலில் சித்திரவதை மற்றும் நியாயமற்ற கைது மற்றும் தடுத்துவைத்தல் ஆகியன உட்பட தனிப்பட்ட சுதந்திரத்தின் மீறல்கள் தொடர்பானவையாகும். தொழில் தொடர்பான முறைப்பாடுகள் இரண்டாவது ஆகக்கூடியவை என்பதுடன், இது கிடைத்த முறைப்பாடுகளின் 16% க்கு சமமானதாகும். அரசாங்கத்தின் சம்பந்தப்பட்டவர்களின் செயலின்மை தொடர்பான முறைப்பாடுகள் மூன்றாவது ஆகக்கூடுதலான எண்ணிக்கையைக் கொண்ட முறைப்பாடுகள் என்பதுடன், அது 14% ஆக விளங்கியது. கிடைத்த 7,712 முறைப்பாடுகளில் 3,704 முறைப்பாடுகள் பிராந்திய அலுவலங்களுக்கு கிடைத்த அதேவேளை, எஞ்சியவை தலைமை அலுவலகத்திற்கு கிடைத்தன.

| **முறைப்பாடுகளின் வகைகள்** | **பிராந்திய அலுவலகங்கள்** | **தலைமை அலுவலகம்** | **கூட்டி மொத்தம்** |
|---|---|---|---|
| **தனிப்பட்ட சுதந்திரம்** | **796** | **1018** | **1814** |
| சித்திரவதை (உடல்ரீதியான மற்றும் உளவியல்ரீதியான) | 129 | 286 | 415 |
| தொந்தரவு | - | - | - |
| பொதுவான தொந்தரவு | 52 | 193 | 245 |
| பாலியல் தொந்தரவு | 6 | - | 6 |
| அச்சுறுத்தல்கள் | 229 | 263 | 492 |
| தரக்குறைவாக நடத்துதல் | 62 | 67 | 129 |
| தன்னிச்சையிலான் கைதுகள்.'.தடுத்துவைத்தல் | 251 | 190 | 441 |
| தடுப்புகாவல் நிலைமைகள் | 2 | 1 | 3 |
| பாதுகாவலில் மரணம் | 2 | 3 | 5 |
| வலிந்த அல்லது தன்னிச்சையிலான காணாமலாக்கப்படல்கள் | 1 | - | 1 |
| ஆட்கடத்தல்கள் | 1 | - | 1 |
| நீதிக்குப் புறம்பான கொலைகள் | 2 | - | 2 |
| எதிர்ப்பு மரணங்கள் | - | - | - |
| சிறைக்கைதிகளின் உரிமைகள் | 6 | 4 | 10 |
| காணாமல்போனோர் | 51 | 11 | 62 |
| வேறு | 2 | - | 2 |
| **வேறு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்** | 9 | 22 | 31 |
| கருத்துச் சுதந்திரம் | 2 | 3 | 5 |
| ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் | 2 | - | 2 |
| ஆமைப்புச் சுதந்திரம் | 1 | 1 | 2 |
| மதச் சுதந்திரம் | 3 | 16 | 19 |
| தடையின்றி நடமாடுவதற்கான சுதந்திரம் | - | 1 | 1 |
| தகவலுக்கான உரிமை | - | 1 | 1 |
| வேறு | 1 | - | 1 |
| **தொழில்** | **749** | **725** | **1474** |
| **கல்வி** | **357** | **390** | **747** |
| **பிரசித்தமான பாடசாலைகளுக்கு அனுமதி** | **157** | **207** | **364** |
| **கல்வி உரிமைகள் மீது வேறு முறைப்பாடுகள்** | **200** | **183** | **383** |
| **அரசாங்க சேமநலன் சேவைகள்** | **123** | **14** | **137** |
| **உட்கட்டமைப்பு வசதிகள்** | **110** | **49** | **159** |
| **வாக்காளர் பதிவு தொடர்பில் முறைப்பாடுகள்** | **3** | **4** | **7** |
| **ஆரசாங்க நிறுவனங்களின் செயலின்மை பற்றிய முறைப்பாடுகள்** | **769** | **362** | **1131** |
| பொலிஸ் | 464 | 190 | 654 |
| வேறு அரசாங்கச் சம்பந்தப்பட்டவர்கள் | 305 | 172 | 477 |

| | | | |
|---|---|---|---|
| சிறுவர் உரிமைகள் | 14 | 5 | 19 |
| மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் | 7 | - | 7 |
| மொழி உரிமைகள் | 3 | 1 | 4 |
| புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் | 33 | 20 | 53 |
| LGBT (பெண் ஓரினச்சேர்க்கையாளர், ஆண் ஓரினச்சேர்க்கையாளர், ஈரினச் சேர்க்கையாளர், மாற்றுப் பாலினத்தவர்) | - | 1 | 1 |
| சுகாதாரம் | 13 | 6 | 19 |
| காணி மற்றும் ஆதன உரிமைகள் | 626 | 184 | 810 |
| உ.இ.பெ.்.மீளத்திரும்பும் அகதிகள் | 17 | 1 | 18 |
| சூழல் | 40 | 31 | 71 |
| நிருவாக விடயங்கள் | 212 | 346 | 558 |
| அனுமதிச்சீட்டுக்கள் /உத்தரவுப்பத்திரங்கள் | 24 | 37 | 61 |
| தவறாகப் பயன்படுத்தல் /அதிகாரத் துஷ்பிரயோகம் | 107 | 265 | 372 |
| வேறு நிருவாக விடயங்கள் | 81 | 44 | 125 |
| பெண்களின் உரிமைகள் | 29 | 3 | 32 |
| வயது மூத்தோரின் உரிமைகள் | - | 1 | 1 |
| ஆணையினுள்ள அல்ல/முன்செல்ல முடியும், முடியாது | 292 | 1,786 | 2,078 |
| மொத்தம் | 4,202 | 4,969 | 9,171 |




- **விடயங்களின் புள்ளிவிபரங்கள்:**

2016இல் மொத்தமாக 4,387 விடயங்களை ஆணைக்குழு நிறைவு செய்தது. நிறைவடைந்த 4,387 விடயங்களில், பிராந்திய அலுவலகங்களினால் 3,418 விடயங்கள் முடிவுசெய்யப்பட்டன. ஆணைக்குழு 727 விடயங்களில் இணக்கங்களை

வெற்றிகரமாக வசதிப்படுத்திய அதேவேளை, பொருத்தமான நடடிவக்கைக்காக 127 விடயங்கள் வேறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குப் பாரப்படுத்தப்பட்டன. ஆணைக்குழுவானது 803 விடயங்களில் அடிப்படை உரிமையொன்றின் மீறலைக் காணவில்லை. முன்வைக்கப்பட்ட 896 முறைப்பாடுகள் ஒன்றில் மீளப்பெறப்பட்டன அல்லது முறைப்பாட்டாளர் விடயத்தை பின்துரந்து செல்லவில்லை.

| முறைப்பாடுகளின் வகுதிகள் | பிராந்திய அலுவலகங்கள் | தலைமை அலுவலகம் | மொத்தம் |
|---|---|---|---|
| மனித உரிமைகள் மீறல்களின் எண். | 607 | 196 | 803 |
| இணக்கப்பட்டவை | 1,079 | 83 | 1,162 |
| நிவாரணம் வழங்கப்பட்டவை | 640 | 87 | 727 |
| வேறு சம்பந்தப்பட்டவர்களுக்கு பாரப்படுத்தப்பட்டவை | 56 | 71 | 127 |
| வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் | 00 | 34 | 34 |
| விசாரணையில் உள்ள நீதித்துறை நடைமுறைகள் | 100 | 97 | 197 |
| முறைப்பாட்டாளர் அக்கறையை இழத்தல் | 445 | 132 | 577 |
| ஆணையினுள் வராதவை | 328 | 80 | 408 |
| மீளப்பெறப்பட்டவை | 132 | 187 | 319 |
| நேரக் கட்டுப்பாடு (குறித்துரைக்கப்பட்ட) | 31 | 2 | 33 |
| **மொத்தம்** | **3,418** | **969** | **4,387** |

- **பரிந்துரைகள்:**

2016இல், மொத்தமாக 44 பரிந்துரைகளை ஆணைக்குழு வழங்கியது. கல்வி தொடர்பான உரிமைகளின் மீறல் மீதே பெரும்பான்மையான பரிந்துரைகள் விளங்கியதுடன், இவை வெளிப்படையாக அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்படாத போதிலும், அரசியலமைப்பில் உள்ள சமத்துவத்திற்கும் மற்றும் பாரபட்சமின்மை ஏற்பாடுகளின் மீறல்களுக்கும் உயர்ச்சியை வழங்குகின்றன (2016இல் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் முழுமையான பட்டியலொன்றுக்கு பிற்சேர்க்கை 2ஐப் பார்க்க)

| விடயம் /துறை | எண். |
|---|---|
| கல்வி தொடர்பான உரிமைகள் | 19 |
| பொருளாதார சமூக, கலாசார உரிமைகள் | 04 |
| தனிப்பட்ட சுதந்திரம் தொடர்பான உரிமைகள் | 14 |
| வேறு | 04 |
| **மொத்தம்** | **41** |

மூலம்: இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தரவுத்தளம்

கல்வி தொடர்பான உரிமைகள், கிடைத்த முறைப்பாடுகளின் பாரிய தொகையளவின் காரணமாக பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளினுள் வருகின்ற அதேவேளை, அது ஒரு புறம்பான பகுதியாக அடையாளங்காணப்படுகின்றது. இவை

பாடசாலை அனுமதிகள், மாணவர்களின் ஒழுக்காற்று விடயங்கள், பல்கலைக்கழக அனுமதிகள், கல்வி நிறுவனங்களில் தொந்தரவு செய்தல் மற்றும் கல்விசார் நிறுவனங்களில் பதவியேற்றங்கள் ஆகியனவற்றின் மீறல்கள் தொடர்பான பரிந்துரைகளாகும்.

ஓய்வூதியம், வாழ்வாதாரம், சம்பள ஏற்றங்கள், இடமாற்றங்கள், ஆட்சேர்ப்பு, சேவை நிபந்தனைகள், இடைநிறுத்தம், பதவிநீக்கங்கள், நஷ்டஈடுகள் மற்றும் அதிகாரத்தின் தப்பான பிரயோகம் ஆகியன தொடர்பான மீறல்களை பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பிலான வேறு பரிந்துரைகள் கொண்டுள்ளன. தனிப்பட்ட சுதந்திரம் தொடர்பான உரிமைகள் சட்டவிரோதமான கைதுகள் மற்றும் தடுத்துவைத்தல், சித்திரவதை மற்றும் பாதுகாவலில் மரணம் போன்ற மீறல்களைக் கொண்டுள்ளன.




## 3.2 உரிமைகளினால் தனிப்பட்ட முறைப்பாடுகளின் உதாரணங்கள்

### 3.2.1 சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மை

- **அரசாங்கப் பாடசாலையொன்றிலிருந்து இடைநிறுத்தம் (முறைப்பாட்டு இல. HRC/2124/16/I-23)**

ஒழுக்காற்று காரணங்கள் மீது அண்ணளவாக 3 மாதங்களைக் கொண்ட காலமொன்றுக்கு அரசாங்கப் பாடசாலையொன்றிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மாணவர் ஒருவரின் கல்விக்கான உரிமையின் மீறலில் விளைந்துள்ள உறுப்புரை 12(1)இன் கீழான சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு அடிப்படை உரிமையின் மீறலொன்றை

ஆணைக்குழு கண்டறிந்தது. கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள 2005/17ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள தப்பான நடத்தையில் மாணவர் ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையானது இவ்விடயத்தில் பாடசாலையின் சம்பந்தப்பட்டவர்களால் பின்பற்றப்படவில்லை. கல்வி போதிப்போர் மாணவர்களின் தாபரிப்பு-பெற்றோர் என்பதுடன், எனவே மாணவர்களின் சிறந்த அக்கறையில் செயற்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளனர் என ஆணைக்குழு மேலும் கருத்தினைக் கொண்டிருந்தது. அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று அங்கீகாரங்களைக் குறிப்பிடுகின்ற 2012/37ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் வழியினால், கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட ஒழுக்கவியல் நியதிக்கு முரணாக தாபரிப்பு-பெற்றோர் ஒருவரின் கருத்துருக்கு மாறாக பாடசாலையின் அதிபர் செயற்பட்டுள்ளார். ஏதேனும் தடைகள் இன்றி மாணவரின் கல்வியைத் தொடர்வதற்கு வசதியளிக்குமாறு அதிபரை அறிவுறுத்தும் பரிந்துரையொன்றை ஆணைக்குழு வழங்கியது. இந்த சுற்றறிக்கைகளின் அடக்கத்தின் புரிந்துணர்வின் பற்றாக்குறையினால் அது பாடசாலையின் சம்பந்தப்பட்டவர்களினால் தன்னிச்சையிலான நடத்தைக்கு பங்களித்துள்ளது என்பதனால், மேற்படி சுற்றறிக்கைகள் மீது விழிப்பியலை உயர்த்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துமாறு கல்வி அமைச்சுக்கு அது மேலும் பரிந்துரைத்தது.

- **அரசாங்கப் பாடசாலையொன்றின் தரம் 2க்கு அனுமதி (முறைப்பாட்டு இல. HRC/2694/15)**

அவசியப்பட்ட மூலப்பிரமாணத்தை விண்ணப்பம் நிறைவேற்றிய போதிலும், 2015இல் அரசாங்கப் பாடசாலையொன்றின் தரம் 2க்கு பிள்ளையின் அனுமதியைப் பரிந்துரைக்காதபடியினால் கல்வி அமைச்சினால் அரசியலமைப்பின் உறுப்புரை 12(1)இன் கீழ் சமத்துவத்திற்கான தனது மகனின் உரிமை மீறப்பட்டுள்ளதாக மனுதாரர் சார்த்துரைத்தார். ஆரம்பத்தில் பிள்ளையின் விண்ணப்பமானது 2008/38ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் உள்ளடக்கியிருந்த தேவைப்பாடுகளின் பிரகாரம் பாடசாலையின் அதிபரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், அங்கீகாரத்திற்கு கல்வி அமைச்சுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், அதைத் தொடர்ந்து, சகல அரசாங்கப் பாடசாலைகளுக்கும் வெற்றியடையாத விண்ணப்பங்களுக்கு எதிராக மேன்முறையீடுகளைக் கரிசனைக்கெடுப்பதற்காக விசேட மேன்முறையீடுகள் குழுவொன்று கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டது. மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கோரி தேசியச் செய்திப்பத்திரிகைகள் ஊடாக அறிவித்தலொன்று பிரச்சாரப்படுத்தப்பட்டது. அவரது பிள்ளையின் விண்ணப்பம் வெற்றியடைந்ததினால் அத்தகைய குழுவுக்கு விண்ணப்பமொன்றை மனக்குறையிலான பிள்ளையின் தாய் செய்திருக்கவில்லை. எனினும், மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கும்வகையில் பாடசாலை அதிபரினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை உதாசீனம் செய்து, விசேட மேன்முறையீடுகள் குழுவுக்கு வெற்றிகரமான மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்த பிள்ளைகளின் அனுமதியை மட்டுமே அமைச்சு அங்கீகரித்துள்ளது.

விசேட மேன்முறையீடுகள் குழுவொன்றைத் தாபிப்பதற்கு 2008/38ஆம் இலக்கச் சுற்றறிக்கை வழங்கவில்லை என்றும், அவ்வாறு செய்கையில், அதன் அதிகாரங்களை மீறும் விதத்தில் கல்வி அமைச்சு செயற்பட்டுள்ளது என்றும் ஆணைக்குழு

கண்டறிந்தது. எனவே, அரசியலமைப்பின் உறுப்புரை 12(1)இன் மீறலொன்றை ஆணைக்குழு கண்டறிந்ததுடன், 2016ஆம் ஆண்டில் சொல்லப்பட்ட அரசாங்கப் பாடசாலையின் தரம் 3க்கு மனக்குறையிலான தரப்பின் பிள்ளையை அனுமதிக்குமாறு பரிந்துரைத்தது.

- **அரசாங்க நிறுவனமொன்றுக்கு ஆட்சேர்ப்பு (முறைப்பாட்டு இல. HRC/2449/15)**

2016 மே மாதத்தில், நேர்முகங்காணல் நடைமுறையின் போது, அரசியலமைப்பின் உறுப்புரை 12(1)இன் மீறலொன்று கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை மின்சார சபையின் அலுவலக உதவியாளர் ஒருவரின் பதவிக்கு மனுதாரரின் நியமனத்தை ஆணைக்குழு பரிந்துரைத்தது. அரசாங்கப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து வெளிவாரிப் பட்டம் மற்றும் ஒத்த பதவியொன்றில் முன்கூட்டிய அனுபவம் ஆகியன உட்பட அவசியப்பட்ட தகைமைகளுக்கு மேலானவற்றுடன் பதவிக்கு மனுதாரர் விண்ணப்பித்திருந்தார். அவசியப்பட்ட குறைந்தபட்ச தகைமைகளுக்கு மேன்மிகையிலான தகைமைகளைக் கொண்டிருப்பது தகுதி நீக்கத்திற்கான அடிப்படையொன்று அல்ல என்ற கருத்தினை ஆணைக்குழு கொண்டிருந்தது. இதனால், முழு 30 மதிப்பெண்களை விண்ணப்பதாரர் பெற்றிருக்க வேண்டும் என்ற போதிலும், விண்ணப்பதாரரின் கல்விசார் தகைமைகளுக்கு 20 மதிப்பெண்களில் 10 மதிப்பெண்கள் மட்டும் குறித்தொதுக்கப்பட்டதை ஆணைக்குழு நிராகரித்தது. மேலும், ஒன்றில் நேர்முகங்காண்போரின் தற்துணிவின் மீதான அடிப்படையில் செயற்றிறன் மிக்க நேர்முகங்காணல் மதிப்பெண்களின் அளனவ 60ஆக ஒதுக்குவதற்கு அல்லது தேருனர்களின் செயற்றிறனாக நேர்முகங்காண்போர் மதிப்பிடுவது மீதான மூலப்பிரமாணத்திற்கு போதியளவு நியாயமொன்றை வழங்குவதற்கு பிரதிவாதிகள் தவறியுள்ளதாக ஆணைக்குழு கண்டறிந்தது. எனவே, விண்ணப்பதாரியின் கல்விசார் தகைமைகளுக்கு போதியளவு நிறையை ஆட்சேர்ப்பாளர்கள் வழங்கவில்லை அல்லது அடிப்படை உரிமைகளின் மீறலொன்றில் விளைந்துள்ள அவர்களது மதிப்பீட்டில் ஒளிவுமறைவின்மையுடன் அவர்கள் செயற்படவில்லை என ஆணைக்குழு கண்டறிந்தது

- **அரசாங்கப் பல்கலைக்கழங்களின் பரீட்சைக் கொள்கைகள் (முறைப்பாட்டு இல. HRC/4326/15)**

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையடைவதற்கு வரவின் அவசியப்பட்ட சதவீதத்தை மாணவர் நிறைவேற்றாததின் அடிப்படையின் மீது பல்கலைக்கழகம் தடுத்துவைத்திருந்த சர்வதேச வர்த்தகச் சட்டம் என்ற பாடத்திற்கு பல்கலைக்கழகத்தின் சட்டத்தின் முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் தேருனர் ஒருவரான மனுதாரரின் முடிவுகளை விடுவிக்குமாறு அரசாங்கப் பல்கலைக்கழகமொன்றைப் பணிக்கும் பரிந்துரையொன்றை ஆணைக்குழு செய்தது. அரசியலமைப்பின் உறுப்புரை 12(1)இன் மீறலொன்றைக் கண்டறிந்த பின்னர் மேற்படி பாடத்தின் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மனுதாரரை அனுமதிப்பதற்கு பல்கலைக்கழகத்தை வேண்டுகின்ற அதன் இடைக்காலப் பரிந்துரையை உறுதிப்படுத்தி, இந்தப் பரிந்துரையை ஆணைக்குழு செய்தது. கற்கையின் மார்க்கத்தின் போது ஏதாவது நேரத்தில்

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையடைவதற்கு விரிவுரைகளின் 50%ஐ கொண்ட குறைந்தபட்சமொன்றிலான வரவின் தேவைப்பாடு குறித்து மாணவர்களுக்கு தோதாக அறிவிக்கப்படவில்லை என மனுதாரர் சார்த்துரைத்தார். மேலும், நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் மூன்று காலாண்டுகளின் போது அத்தகைய தேவைப்பாடு வற்புறுத்தப்படவில்லை. முன்கூட்டிய அறிவித்தலின் பற்றாக்குறை இருந்த போதும், இறுதிப் பரீட்சைக்கு இரு மாதங்களுக்கு முன்னரே சொல்லப்பட்ட கொள்கையைக் கடுமையாக அமுல்படுத்துவதென பல்கலைக்கழகம் தீர்மானித்திருந்தது. இந்தத் தகவலை அறிவிப்பதற்கு திருப்திகரமான தரத்திலான முறையொன்றை அல்லது ஒரே சீரானதன்மையற்ற எழுந்தமான முறைகளை விரும்புகின்ற அதன் மாணவர்களுக்கு ஏதேனும் வேறு தகவலைப் பல்கலைக்கழகம் அமுல்படுத்தவில்லை என ஆணைக்குழு கவனத்திற்கெடுத்தது. எனவே, விசேடமாக அத்தகைய கொள்கையினால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களின் சட்டபூர்வமான எதிர்பார்ப்புக்களைக் கொள்கையின் மாற்றமொன்று பெரிதுமே குழப்புகின்ற போது, ஒவ்வொரு தேருனரையும் அடைவதற்கு வடிவமைக்கப்பட்ட தொடர்பாடலின் சட்டபூர்வமான தரப்படுத்தப்பட்ட முறையொன்றைப் பயன்படுத்துவதற்கு பல்கலைகழகம் மீது கடப்பாடொன்று இருக்கின்றது என்ற கருத்தினை ஆணைக்குழு கொண்டிருந்தது.

- **கட்புலக் கலைஞர்களின் பாரபட்சம் (முறைப்பாட்டு இலக்கங்கள் HRC/2037/15, HRC/2038/15, HRC/1994/15)**

2016 ஒக்ரோபரில், மனுதாரர்களில் ஒருவரினால் இயக்கப்பட்ட தொலைக்காட்சி நாடகமொன்றை முழுமையாக மீள்-ஒளிபரப்புமாறு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு (இ.ரூ.கூ.) இ.ம.உ.ஆ.கு. பணித்தது. ஏனெனில் அதன் ஒளிபரப்பை இடைநிறுத்துவறத்கு இ.ரூ.கூ.இன் தீர்மானம் தன்னிச்சையானது என அது கண்டறிந்தது. தொலைக்காட்சி நாடகத்தை மீள்-ஒளிபரப்புமாறும் அத்துடன் மரியாதைக்கான சேதங்களுக்கும் மற்றும் நிதிசார் நஷ்டங்களுக்கும் இழப்பீடு செய்யுமாறும் கோரி இயக்குனர், தயாரிப்பாளர் மற்றும் ஒரு பார்வையாளர் ஆகியோரினால் மனுக்கள் முன்வைக்கப்பட்டன. குறைந்த பார்வையாளர் வீதப்பாடுகள் மற்றும் விளம்பரங்களினால் தோற்றுவிக்கப்பட்ட குறைந்த வருமானம் ஆகியனவற்றை எடுத்துக்காட்டி தொலைக்காட்சி நாடகத்தினை ஒளிபரப்புவதை இடைநிறுத்துவதை இ.ரூ.கூ. தீர்மானித்த போது அது அரசியலமைப்பின் உறுப்புரை 12(1)இன் மீறலொன்றாக ஆணைக்குழு கண்டறிந்தது. அதன் ஒப்பந்தத்திலான கடப்பாடுகளை இ.ரூ.கூ. மீறியுள்ளது. அத்துடன் தரப்புக்களுக்கு இடையில் உடன்பட்டவாறு நேரத்தின் போது தொலைக்காட்சி நாடகத்தை ஒளிபரப்பவில்லை அல்லது தரப்புக்களுக்கு இடையில் உடன்பட்டவாறு வாரத்தின் 4 நாட்களுக்கு அதை ஒளிபரப்பவில்லை என கண்டறியப்பட்டது. எழுத்துமூல ஒப்பந்தத்தின்படி தரப்புக்களுக்கு இடையில் உடன்பாடு இடைநிறுத்தப்பட முடியும் என்பதற்கான காரணங்கள் இருந்த போதிலும், தனியார் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி நிறுவனமொன்றினால் நடத்தப்பட்ட பார்வையாளர் வீதப்பாடுகளில் ஆய்வு முடிவுரையை நியாயப்படுத்துவதற்கு பார்வையாளர்களின் போதியளவு மாதிரியைக் கைக்கொள்வதில் வெற்றியடையவில்லை என ஆணைக்குழு அவதானத்தைக் கொண்டிருந்தது. அதன் தீர்மானத்தை நியாயப்படுத்தும் விதத்தில் இ.ரூ.கூ.க்கான

வருமானத்தின் இழப்பொன்றை தொலைக்காட்சி நாடகத்தின் ஒளிபரப்பு விளைவித்துள்ளது என்பதை இ.ரூ.கூ. வெற்றிகரமாக நிரூபிக்கவில்லை என அது மேலும் அவதானத்தைக் கொண்டிருந்தது. எனவே, தரப்புக்களுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், தொலைக்காட்சி நாடகத்தை மீள்-ஒளிபரப்புமாறும் அத்துடன் ஒளிபரப்புவதற்காக இ.ரூ.கூ.க்கு சமர்ப்பிக்கப்பட்டால் மனுதாரர்களின் எதிர்கால வேலைக்கு எதிராக பாகுபாடு காட்டுவதை அல்லது உதாசீனம் செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் இ.ரூ.கூ.ஐ ஆணைக்குழு பணித்தது.

### 3.2.2 பாதுகாவலிலான வன்முறை

- **பொலிஸ் தடுப்புக்காவலில் உடல்ரீதியிலான சித்திரவதை (முறைப்பாட்டு இல. HRC/AP/734/2013)**

பொலிஸினால் தான் தன்னிச்சையாக கைது செய்யப்பட்டதாகவும், தடுப்புக்காவலில் சித்திரவதைக்கு உட்பட்டதாகவும் இ.ம.உ.ஆ.கு.க்கு மனுதாரர் முறைப்பாடு செய்திருந்தார். இந்தக் குற்றச்சாட்டை மறுத்துரைத்து, குடிவெறியாட்டத்திற்காகவும், ஒழுக்கமற்ற நடத்தைக்காகவும் மனுதாரர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் வலியுறுத்தியது. இந்த வலியுறுத்தல் பொலிஸ் களப் பதிவேடுகளில் உள்ள பதிவுகளினால் உறுதிப்படுத்தப்பட்டது. எதிரிடையாக சாட்சியத்தை முன்வைப்பதில் மனுதாரர் வெற்றியடையாததினால், அரசியலமைப்பின் உறுப்புரை 13(1)இன் மீறலொன்றை ஆணைக்குழு கண்டறியவில்லை. எனினும், அனுராதபுரம் போதனா வைத்தியசாலை மற்றும் அனுராதபுரம் இராணுவ வைத்தியசாலை ஆகியவற்றில் காயங்களுக்கு பெறப்பட்ட வதிவிடச் சிகிச்சைக்காக மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கைகளினதும் அத்துடன் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அலுவலரின் அறிக்கையினதும் மீதான அடிப்படையில், அரசியலமைப்பின் உறுப்புரை 11இன் கீழ் அவரது அடிப்படை உரிமைகளின் மீறலொன்றுக்கு மனுதாரர் உடன்பட்டிருந்ததார் என ஆணைக்குழு முடித்துவைத்தது. மனுதாரருக்கு ரூ.25,000 கொண்ட நட்டஈட்டினைச் செலுத்துமாறு பொலிஸுக்கு ஆணைக்குழு பணித்தது.

- **அரசாங்கப் பாடசாலையொன்றில் உடல்ரீதியானதும் உளவியல்ரீதியிலானதுமான சித்திரவதை (முறைப்பாட்டு இல. HRC/1862/15/I-23)**

2016 ஓகஸ்டில், அரசாங்கப் பாடசாலையொன்றின் ஒழுக்கத்திற்கு பொறுப்பான ஆசிரியரினால் மாணவர் ஒருவர் மீது தூண்டப்படாத உடல்ரீதியிலான தாக்குலானது உடல்ரீதியிலான காயங்களையும், உளவியல்ரீதியிலான மனவதிர்ச்சியையும் விளைவித்ததுடன், இது அரசியலமைப்பின் உறுப்புரை 11இன் மீறலொன்றுக்கு உட்பட்டதாகும். மீறலுக்குப் பொறுப்பான ஆசிரியருக்கு எதிராக பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு கல்வி அமைச்சுக்கு ஆணைக்குழு அறிவித்ததுடன், அவரது பாடசாலையில் பாடசாலைகளினுள் ஒழுக்கத்தின் நடத்தை தொடர்பில் 2005/17ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் உள்ளடக்கத்தைப் பிரயோகிப்பதற்கும் அத்துடன் அதன் முன்னேற்றம் குறித்து ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதற்கும் நீண்ட கால நடைமுறையொன்றை அமுல்படுத்துவதற்கு அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபருக்குப் பணித்தது.

## 3.3 அதன் சொந்த இயக்க விசாரணைகள்

சட்டத்தின் பிரிவு 14இன் கீழ், அதன் சொந்த இயக்க அதிகாரத்தை நிறைவேற்றுவதில் பெருமளவு பிரச்சனைகளில் ஆணைக்குழு (அதன் சொந்த இயக்கத்தில்) தலையிட்டது. பெரிதுமே ஊடகங்கள் கண்காணிப்பினதும் மற்றும் ஆணைக்குழுவின் கவனத்திற்கு அத்தகைய பிரச்சனைகளைக் கொண்டுவருகின்ற தனிப்பட்டவர்களினதும் ஊடாக, தலையீட்டினை உரித்துகொள்ளும் பிரச்சனைகள் அடையாளங்காணப்படுகின்றன. முழுவளவில் பின்வருவன போன்ற வேறுபட்ட சம்பவங்களினுள் 17 அதன் சொந்த இயக்க விசாரணைகளை ஆணைக்குழு ஆரம்பித்தது: (அதன் சொந்த இயக்க விசாரணைகளின் முழுப் பட்டியலொன்றுக்கு பிற்சேர்க்கை 3ஐப் பார்க்க).

- **எம்பிலிப்பிட்டியவில் பொலிஸுக்கும் மற்றும் நிகழ்ச்சியொன்றின் ஒழுங்கமைப்பாளர்களுக்கும் இடையிலான மோதலொன்றின் போது நபர் ஒருவரின் மரணம் குறித்து விசாரணை**

எம்பிலிப்பிட்டியவில் பொலிஸுக்கும், ஒழுங்கமைப்பாளர்களுக்கும் இடையில் மோதலொன்றின் விளைவாக நபர் ஒருவரின் மரணம் குறித்து இ.ம.உ.ஆ.கு. புலனாய்வுவொன்றை ஆரம்பித்தது. ஊடக அறிக்கைகள் ஊடாக ஆணைக்குழுவின் கவனத்திற்கு சம்பவம் கொண்டு வரப்பட்டது. மோதலின் போது வீடொன்றில் மேல் தளத்திலிருந்து விழுந்ததினால் ஏற்பட்ட பல்-எண்ணிக்கையிலான காயங்களினால் நபர் மரணமடைந்தார் என ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. எனினும், புலனாய்வொன்றைப் பின்துரந்து செல்வதிலிருந்து ஆணைக்குழுவைத் தள்ளிவைக்கும் விதத்தில் மீஉயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் விண்ணப்பமொன்றை மரணமானவரின் குடும்பம் தாக்கல் செய்ததினால், புலனாய்வினை ஆணைக்குழு நிறுத்தியது.

- **களுத்துறையிலும் மற்றும் மத்துகமவிலும் இரு பாடசாலைகளின் தரம் 1க்கு பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதற்கு இரு பாடசாலைகளின் அதிபர்களைக் கட்டாயப்படுத்திய அரசியல்வாதியொருவரின் சம்பவங்கள் குறித்து விசாரணை**

களுத்துறையில் பாடசாலையொன்றின் வளவில் பலாத்காரமாக உட்பிரவேசித்த அரசியல்வாதியொருவர் பாடசாலையில் பிள்ளையொன்றைச் சேர்த்துக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தியமை குறித்து ஊடக அறிக்கைகளுக்குப் பின்தொடராக, மத்துகமவில் பாடசாலை அதிபர் ஒருவரின் கழுத்தை நெரிக்க முயற்சித்ததுடன், ஒத்ததன்மையிலான கோரிக்கையொன்றின் மீது தற்கொலை செய்வதாக அச்சுறுத்திய அதே அரசியல்வாதியைச் சம்பந்தப்படுத்திய இன்னொரு சம்பவத்தில், சம்பவங்கள் குறித்து புலனாய்வொன்றை ஆணைக்குழு ஆரம்பித்தது. அதேவேளை, இது தொடர்பில் அமைச்சினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரங்களைக் கோரி மேல் மாகாண கல்வி அமைச்சுக்கு ஆணைக்குழு எழுதியது.

- **கொழும்பு, கஜிமாவத்தையில் வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டதில் தலையீடு**

முன்கூட்டிய அறிவித்தல் இன்றி தமது வீடுகள் இடித்துத்தள்ளப்பட்டதற்கு எதிராக கொழும்பு, கஜிமாவத்தையின் குடியிருப்பாளர்களிலான போராட்டமொன்று குறித்து ஊடகங்களில் அறிக்கையொன்றுக்கு பதிலிறுப்பதில் அதன் சொந்த இயக்கம் மீதான அதிகாரத்தை நிறைவேற்றுவதற்கு இ.ம.உ..ஆ.கு. தலையிட்டது. அமைவிடத்திற்கு உண்மையைக் கண்டறியும் வருகைதரலொன்றுக்கு பின்தொடராக, வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு அவசரகால உறைவிடங்கள் உட்பட உடனடியான தலையீட்டினை வேண்டுகின்றவாறு பெருமளவு பிரச்சனைகளை ஆணைக்குழு அடையாளங்கண்டது. வெளியேற்றம் தொடர்பில் தொடர்பான சம்பந்தப்பட்டவர்களைக் கொண்ட கூட்டமொன்றுக்கு ஆணைக்குழு அழைப்பு விடுத்ததுடன், குடியிருப்பாளர்களால் முன்கூட்டிய அறிவித்தலின் பற்றாக்குறையை அவர்களது கவனத்திற்கு கொண்டு வந்ததுடன், வெளியேற்றத்தின் போது எடுக்கப்பட்டிருக்கக்கூடிய மாற்று நடவடிக்கைகளையும் முன்மொழிந்தது. சொல்லப்பட்ட சனசமூகத்தின் மீள்-இடமாற்றத்தை அல்லது மீள்-குடியேற்றத்தை உடனடியாகத் திட்டமிடுமாறும் சம்பந்தப்பட்டவர்களை ஆணைக்குழு வேண்டிக்கொண்டது.

## அத்தியாயம் 4:

# ஆராய்ச்சி மற்றும் கண்காணித்தல்

4.1. கருப்பொருள்-சார்ந்த உப-குழுக்கள்
4.2. நடத்தப்பட்ட ஆய்வுகள்
4.3. கண்காணித்தல் செயற்பாடுகள்

# 04 ஆராய்ச்சி மற்றும் கண்காணித்தல்

## 4.1 கருப்பொருள்-சார்ந்த உப-குழுக்கள்

மனித உரிமைகளுக்கு மரியாதையை மேம்படுத்துவதற்கும் அத்துடன் அதைப் பாதுகாப்பதற்கும் கொள்கை விவகாரங்கள் மீது இலங்கை அரசாங்கத்திற்கு ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் வழங்குவதற்கான அதன் ஆணைக்கு அமைவாக இ.ம.உ.ஆ.கு. குறிப்பான கருப்பொருள்-சார்ந்த விவகாரங்கள் மீது ஒன்பது (09) உப-குழுக்களை நியமித்தது. இலங்கை அரசாங்கத்திற்குச் செய்வதற்கான கொள்கைத் தலையீடுகள் மீது ஆணைக்குழுவுக்கு பரிந்துரைகளைச் செய்வதற்கும் அத்துடன் ஒவ்வொரு கருப்பொருள் தொடர்பில் சட்டவாக்கத்தையும், கொள்கைகளையும் மற்றும் உத்தியோகபூர்வ நடைமுறைகளையும் மதிப்பாய்வதற்கும் அத்துடன் சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகளுக்கு அவசியமான பிரதிநிதித்துவங்களைச் செய்வது தொடர்பில் சம்பந்தப்பட்ட கருப்பொருள் மீது ஆணைக்குழுவுக்கு ஆலோசனையை வழங்குவதற்கும் உப-குழுக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. நிபுணர்களையும் மற்றும் சிவில் சமூக செயலார்வலர்களையும் உப-குழுக்களின் உறுப்புரிமை கொண்டுள்ளது. ஒவ்வொரு குழுவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆணையாளர்களினால் தலைமைவகிக்கப்படுகின்ற அதேவேளை, ஒவ்வொரு உப-குழுவுக்கும் செயலாளர்களாக இ.ம.உ.ஆ.கு. பதவியணி உறுப்பினர்கள் செயற்படுகின்றனர். உப-குழுக்கள் வருமாறு

1. அங்கவீனங்களுடனான நபர்கள் மீதான உப-குழு
2. கல்விக் கொள்கை மீதான உப-குழு
3. LGBTIQ நபர்களின் உரிமைகள் மீதான உப-குழு
4. பெருந்தோட்டத் தொழிலாளர் உரிமைகள் மீதான உப-குழு
5. சித்திரவதையையும், பாதுகாவலிலான வன்முறையையும் தடுப்பது மீதான உப-குழு
6. பால்நிலை மீதான உப-குழு
7. வயது மூத்தோரின் உரிமைகள் மீதான உப-குழு
8. பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான உப-குழு
9. புலம்பெயர் ஊழியர்களின் உரிமைகள் மீதான உப-குழு

நிபுணர்களையும் மற்றும் சிவில் சமூகச் செயலார்வலர்களையும் உப-குழுக்களின் உறுப்புரிமை கொண்டுள்ளது. ஒவ்வொரு குழுவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆணையாளர்களினால் தலைமை வகிக்கப்படுகின்ற அதேவேளை, ஒவ்வொரு உப-

குழுவுக்கும் செயலாளர்களாக இ.ம.உ.ஆ.கு. பதவியணி உறுப்பினர்கள் செயற்படுகின்றனர்.

2016இன் போது, ஒவ்வொரு கருப்பொருள்-சார்ந்த துறையின் நோக்கெல்லையினுள் முன்னுரிமையின் விளைவுகளை அடையாளங்காண்பதில் பெருமளவு உப-குழுக்கள் ஈடுபட்டிருந்தன. உதாரணமாக, அதன் தலையீட்டினைக் கோருகின்ற துறைகளாக அடையாளங்காணப்பட்ட வயது மூத்தோரின் உரிமைகள் மீதான உப-குழு, வயது மூத்தோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு கொள்கைகளினதும், சட்டவாக்கத்தினதும் போதுமான அளவு, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சட்ட உதவி உட்பட வயது மூத்தோருக்கான சேவைகளுக்கான அடைதல், அங்கவீன உரிமைச் சட்டமூலத்தினதும், சட்டமூலம் மீது இ.ம.உ.ஆ.கு.இன் பரிந்துரைகளினதும் சட்டமாக்குதலின் கலந்துரையாடப்பட்ட அங்கவீனங்களுடனான நபர்கள் மீதான உப-குழு, LGBTIQ நபர்களின் உரிமைகள் தொடர்பில் அடையாளங்காணப்பட்ட சட்டவாக்க மாற்றங்கள், பால்நிலைச் சான்றுப்பத்திரங்களின் வழங்கல் மீதான சுற்றறிக்கைகளின் அமுலாக்கத்தினைக் கண்காணித்தல், பால்நிலை மாற்று நபர்களின் மருத்துவத் தேவைகளுக்கான அரசாங்க ஆதரவு, சில துறைகள் தலையீட்டினை வேண்டுகின்றவாறு பாடசாலை பாடவிதானத்தில் பாலியல் கல்வி, கல்வியினதும், ஆசிரியர் முன்னேற்றத்தினதும் மற்றும் பாடசாலைகளின் கட்டமைப்பினதும், தத்துவவியல் நிகழ்ச்சித் திட்டங்களினதும் உள்ளடக்கம் அத்துடன் முன்-பள்ளிக் கல்வியைக் கட்டுப்படுத்துவதற்கான அவசியம் ஆகியன மேலதிக ஆய்வினை வேண்டுகின்ற துறைகளாக அடையாளங்காணப்பட்டன.

## 4.2 நடத்தப்பட்ட ஆய்வுகள்

சுதந்திரத்தை இழந்த சிறுவர்களின் பல்-பிரிவிலான ஆய்வொன்றை ஆணைக்குழு ஆரம்பித்தது. சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களுக்கு 12 வருகைதரல்களை ஆய்வு ஏற்படுத்திக் கொடுத்தது. ஆராய்ச்சியைப் பொறுப்பேற்ற பல்-பிரிவிலான குழாமானது வழக்கறிஞர் ஒருவரையும், உளவியலாளர் ஒருவரையும் அத்துடன் சமூக ஊழியர் ஒருவரையும் கொண்டிருந்தது. ஆய்வை மேற்கொள்வதில் பிராந்திய அலுவலகங்களின் ஒருங்கிணைப்பாளர்களினாலும், பணியாளரினாலும் குழாமுக்கு உதவியளிக்கப்பட்டது. 2017இல் நன்னடத்தைத் திணைக்களம், நன்நடத்தை ஆணையாளர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பெண்கள், சிறுவர் அலுவல்கள் அமைச்சு போன்ற அரசாங்க அதிகாரிகளுக்கு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

## 4.3 கண்காணித்தல் செயற்பாடுகள்

சட்டங்களின் உறுப்புரைகள் 11 மற்றும் 28(2) ஆகியவற்றின் கீழ், தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் சேமநலனைக் கண்காணிப்பதற்கும் அத்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உரிமைகள் மரியாதையளிக்கப்படுவதையும், பாதுகாக்கப்படுவதையும் உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் தடுப்புக்காவலின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு பரிந்துரைகளைச் செய்வதற்கும் தடுப்புக்காவல் இடங்களுக்கு வருகைதருவதற்கு ஆணைக்குழு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதன்

அதிகாரங்களை நிறைவேற்றுவதில் இரவிலும், வார இறுதிகளின் போதும் உட்பட ஆண்டு முழுவதும் தடுப்புக்காவல் இடங்களுக்கு அறிவிக்கப்படாத (திடீர்) வருகைதரல்களை ஆணைக்குழு நடத்துகின்றது. இந்த வருகைதரல்கள் தலைமை அலுவலகத்தினாலும், பிராந்திய அலுவலகங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. பொலிஸ் நிலையங்களின் கிரமமான கண்காணித்தலுக்குப் புறம்பாக, சிறைச்சாலைகள், விளக்கமறியல் கூடங்கள் சிறுவர்களுக்கான இல்லங்கள், அங்கவீனர்களுக்கான இல்லங்கள் மற்றும் குடிவரவு தடுப்புக்காவல் நிலையங்கள் போன்ற வேறு தடுப்புக்காவல் இடங்களுக்கும் ஆணைக்குழு வருகை தருகின்றது. இந்த வருகைதரல்களின் போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சித்திரவதையினதும், சட்டவிரோதமாக நடத்தப்படுதலினதும் சார்த்துரைகளையிட்டு புலனாய்வுகளை ஆணைக்குழு நடத்துகின்றது.

- **பொலிஸ் நிலையங்களைக் கண்காணித்தல்**

2016இல், ஆணைக்குழு அதன் தலைமை அலுவலகம் ஊடாக, பொலிஸ் நிலையங்களுக்கு 579 வருகைதரல்களை மேற்கொண்டது. முழு நாட்டிலும் பரந்திருந்த 16 அடையாளங்காணப்பட்ட வழிகளில் வருகைதரல்கள் நடத்தப்பட்டன. சித்திரவதையின் நிகழ்வினைத் தடுப்பதற்கு வேறு தொடர்பான அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற தாபனங்களுடன் ஒருங்கிணைப்பதற்கும், கூட்டுமுயற்சியில் ஈடுபடுவதற்கும் மேலதிகமாக, செயற்றிறனான முன்னேற்பாடானதும், பிரதிக்கிரியையிலானதுமான நடவடிக்கைகள் ஊடாக இலங்கையில் சித்திரவதையின் சம்பவங்களை ஒழிப்பதும், அத்துடன் அத்தகைய வன்முறைகளை இழைக்கின்ற அலுவலர்களை அடையாளங்காண்பதற்கும், தீர்விலான நடவடிக்கையை பரிந்துரைப்பதற்கும் நடடிவக்கைகளை ஆரம்பிப்பதுமே இந்த வருகைதரல்களின் நோக்கமாகும்.

| வழி (எண்.) | 2016இல் மொத்த வழி வருகைதரல்கள் |
|---|---|
| தெமட்டகொடை – மோதர (1-A) | 04 |
| மருதனை – பிலியாந்தல (1-B) | 03 |
| நாரஹேன்பிட்டி – கொள்ளுப்பிட்டி (1-C) | 07 |
| கல்கிசை – அளுத்கம (2) | 08 |
| கடவத்தை – கேகாலை (3) | 04 |
| மஹரகம – இரத்தினபுரி (4) | 03 |
| இரத்தினபுரிக்கு அப்பால் – கலவான – உடவளவை (5) | 02 |
| குருநாகலுக்கு அப்பால் – அம்பன்பொல (6) | 01 |
| மினுவாங்கொடை – குளியாபிட்டிய (7) | 01 |
| நாரம்மல – ஆனமடுவ (8) | 02 |
| வத்தளை – நீர்கொழும்பு (9) | 07 |
| வெல்லம்பிட்டிய – யட்டியாந்தோட்டை – அவிசாவளை (10) | 04 |
| பேலியாகொடை – தொம்பே (11) | 08 |
| கொச்சிக்கடை – கற்பிட்டி (12) | 04 |
| தொடாங்கொட – மத்துகம (13) | 01 |
| வேவல்வத்தை – பணமுற (14) | 00 |
| மொத்த வழி வருகைதரல்கள் | 58 |
| **பொலிஸ் நிலைய வருகைதரல்களின் மொத்த எண்ணிக்கை** | **579** |

ஆண்டின் போது மாதாந்தம் வழி வருகைதரல்களின் பங்கீட்டினையும் அத்துடன் இ.ம.உ.ஆ.கு. தலைமை அலுவலகத்தினால் ஒவ்வொரு மாதத்தின் போதும் வருகைதரப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கையையும் பின்வரும் வரைபடம் சித்தரிக்கின்றது (பிராந்திய அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கான வருகைதரல்களின் விபரங்களுக்கு அத்தியாயம் 7ஐப் பார்க்க).

மாதரீதியாக வழி வருகைதரங்களினதும், பொலிஸ் நிலையங்களுக்கான வருகைதரங்களினதும் எண்ணிக்கை




| | ஜன. | பெப். | மா. | ஏப். | மே | ஜுன். | ஜு. | ஓக. | செப். | ஒக். | நவ. | டி. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒவ்வொரு மாதமும் வழி வருகைதரங்களின் எண். | 8 | 8 | 6 | 2 | 3 | 2 | 2 | 2 | 4 | 8 | 9 | 4 |
| ஒவ்வொரு மாதமும் வருகை தரப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண். | 70 | 81 | 51 | 12 | 23 | 20 | 19 | 21 | 31 | 76 | 115 | 60 |

இந்த வருகைதரல்களின் போது, பின்வருன உட்பட சில பொதுவான பிரச்சனைகள் அடையாளங்காணப்பட்டன:

- கைது செய்யப்படும் போது உரிய நடைமுறையைப் பின்பற்றுவதற்கு தவறுதல்
- பாதுகாவலில் கொடூரமாக நடத்துதல் மற்றும் சித்திரவதை
- நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதில் தாமதம்
- சிறைக்கூடங்களில் அதிகளவு நெருக்கடி மற்றும் அடிப்படை வசதிகளின் பற்றாக்குறை

சித்திரவதை, கொடூரமாக நடத்துதல் மற்றும் தடுப்புக்காவலின் நிலைமைகள் ஆகியனவற்றை கவனத்திற்கெடுப்பதற்கு அதன் கொள்கைத் தலையீடுகளில் இந்த அவதானிப்புக்களை இ.ம.உ.ஆ.கு. மீண்டும் மீண்டும் முனைவுபடுத்துகின்றது.

- **பாதுகாவலில் வேறு இடங்களை (பொலிஸ் நிலையங்கள் சாராத) கண்காணித்தல்**

ஒவ்வொரு மாதமும், பொலிஸ் நிலையங்களுக்கு அல்லது தடுத்துவைத்தல் இடங்களுக்கு குறைந்தபட்சம் இரு வருகைதரல்களை ஆணைக்குழு மேற்கொள்கின்றது. வழமையாக ஆணைக்குழுவின் பல்-பிரிவுகளிலான குழாமொன்றினால் இந்த வருகைதரல்கள் நடத்தப்படுகின்றன. சிறைச்சாலைக்கான

வருகைதரல்களின் போது, நெருக்கடிநிலையையும் மற்றும் சுகாதார வசதிகளுக்கான போதிய அடைதலின் பற்றாக்குறையையும் ஆணைக்குழு அவதானித்தது. இவை சில தருணங்களில் சம்பந்தப்பட்டவர்களுடனான உசாவுகைகளைத் தொடர்ந்து அந்தந்த இடங்களிலேயே கவனத்திற்கெடுக்கப்பட்டன. ஏனைய தடுப்புக்காவல் இடங்களில் அவதானிக்கப்பட்ட பாதுகாப்பிலும் மற்றும் தடுப்புக்காவல் நிலைமைகளிலும் ஏதேனும் விடுகைகள் தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு உடனடியாகவே கொண்டுவரப்பட்டன (பிராந்திய அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட வேறு தடுப்புக்காவல் இடங்களுக்கான கண்காணித்தல் வருகைதரல்களின் விபரங்களுக்கு அத்தியாயம் 7ஐப் பார்க்க)

| நிறுவனம் | தலைமை அலுவலகத்தினால் வருகைதரல்களின் எண். |
|---|---|
| சிறைச்சாலைகள் | 14 |
| பயங்கரவாத விசாரணைப் பிரிவு (TID) | 14 |
| சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் | 13 |
| ‘கசட்’படுத்தப்பட்ட தடுப்புக்காவல் இடங்கள் | 1 |
| புனர்வாழ்வு நிலையம் | - |
| வயது முதிர்ந்தோர் இல்லங்கள் | - |
| வெளிநாட்டுத் தேசிய உடைமை நிலையம் | 3 |
| மொத்தம் | **45** |

ஏனைய தடுப்புக்காவல் இடங்களுக்கு கண்காணித்தல் வருகைதரல்கள்

- **வேறு கண்காணித்தல் செயற்பாடுகள்**

உசாவுகை நடைமுறையில் பங்கெடுப்பாளர்களுக்கான அச்சுறுத்தல்கள் மற்றும் தொந்தரவு ஆகியன தொடர்பிலான முறைப்பாடுகளைப் பெறுவதற்கும், பதிலலிப்பதற்கும் ஆணைக்குழுவில் குவிய முனையொன்றை நியமிப்பதன் மூலம், நல்லிணக்கப் பொறிமுறைகள் மீதான உசாவுகைச் செயலணியை ஆணைக்குழு வசதிப்படுத்தியது.

மேலதிகமாக, அதன் ஆணையை நிறைவேற்றுவதில் வேறுபட்ட அமைவிடங்களுக்கு பெருமளவு உண்மையைக் கண்டறியும் வருகைதரல்களையும் மற்றும் பின்தொடர் வருகைதரல்களையும் ஆணைக்குழு மேற்கொண்டதுடன், சிறுவர் ஒருவருக்கான கல்வி உரிமைகளை மறுத்துரைத்ததிலிருந்து நாட்டின் வேறுபட்ட பகுதிகளைப் பீடித்துள்ள சூழல் பிரச்சனைகள் வரை மிதமிஞ்சிய தன்மையிலான பிரச்சனைகளையிட்டு புலனாய்வு செய்தது.

- தொழிற்சாலையொன்றின் செயற்பாட்டினால் விளைவிக்கப்பட்ட நீர் மாசுபடுத்தலுக்கு எதிராக பகுதியின் குடியிருப்பாளர்களினாலான போராட்டம் ஒன்றின் மீது தாக்கமொன்றுக்கு பதிலிறுப்பாக, 2014இல் வழங்கப்பட்ட குடிநீருக்கான உரிமை மீது அரசாங்க நிறுவனங்களின் பொறுப்பு மீது அதன் அறிக்கையைத் தொடர்ந்து ரத்துபஸ்வலவுக்கு பின்தொடர் வருகைதரலொன்றை இ.ம.உ.ஆ.கு. மேற்கொண்டது. இலங்கை

இளம் இதழியலாளர்கள் சங்கத்துடன் பிரச்சனை மீது மதிப்பாய்வுக் கூட்டமொன்றும் நடத்தப்பட்டது.

- குளியாப்பிட்டியவுக்கு உண்மையைக் கண்டறியும் வருகைதரலொன்று மேற்கொள்ளப்பட்டது. HIV/AIDSஉடன் பாதிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டதன் பேரில் கல்விக்கான உரிமை மறுக்கப்படுகின்ற அபாயத்தை முகங்கொடுத்த சிறுவர் ஒருவரின் பிரச்சனைக்காகவே இது மேற்கொள்ளப்பட்டது.
- சாலாவ பகுதியில் இராணுவ முகாமில் இடம்பெற்ற பெருந்தீயின் காரணமாக குண்டுவெடிப்புகளையும் மற்றும் சிவிலியன்கள் மீதான அதன் தாக்கத்தையும் புலனாய்வு செய்வதற்காக இன்னொரு வருகைதரல் மேற்கொள்ளப்பட்டது.
- குப்பை ஒழிப்புப் பகுதியில் விளைவிக்கப்பட்ட சூழல் மாசுபடுத்தலைச் சோதிப்பதற்காக கண்டியில் உள்ள அம்புளுவாவுக்கு ஆணைக்குழு வருகைதந்தது. இது பகுதியில் பொதுமக்களுக்கு பாரதூரமான சுகாதாரக் கெடுதல்களையும், சூழல் பிரச்சனைகளையும் விளைவித்திருந்தது.
- இயற்கைப் பேரழிவுகளின் பின்னர், நிவாரண முயற்சிகளைக் கண்காணிக்கும் பணி தொடர்பாக 2016இல் கடுமையான மழையின் போது அறநாயக்காவிலும், மீரியபெத்தவிலும் நிலச்சரிவுகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான வருகைதரல்களையும் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் கண்காணிப்பினையும் ஆணைக்குழு மேற்கொண்டது.

## அத்தியாயம் 5:

# கல்வி மற்றும் வெளிக்களம்

5.1. பொதுசன விழிப்பியலை உயர்த்துதல்
5.2. ஊடகங்களுடன் ஈடுபடுதல்
5.3. சிவில் சமூகத்துடன் ஈடுபடுதல்
5.4. ஆலோசனை வழங்கல்

# 05 கல்வி மற்றும் வெளிக்களம்

## 5.1 பொதுசன விழிப்பியலை உயர்த்துதல்

சட்டத்தினால் ஆணையிடப்பட்டவாறு, மனித உரிமைகளின் பிரச்சனைகள் மீது பொதுசன விழிப்பியலையும், கூருணர்வுத்தன்மையையும் எழுப்புவதில் தீவிரமாக ஈடுபடுவதற்கு ஆணைக்குழு பாடுபடுகின்றது. குடிமக்கள் தொகுதியில் மனித உரிமைகளை மேம்படுத்துவதும், பாதுகாப்பதுமே அதன் வாழ்தகவுக்கான உண்மையான நோக்கம் என்பதனால், தமது பணியின் உள்மைய அங்கமொன்றாக பொதுமக்களை ஆணைக்குழு கருதுகின்றது. எனவே, இந்த நோக்கத்தினை நிறைவேற்றுவதில் பெருமளவு முக்கியமான நிகழ்வுகளினால் 2016ஆம் ஆண்டு குறித்துக்கொள்ளப்படுகின்றது.

- **சர்வதேச மனித உரிமைகள் தினம்**

இ.ம.உ.ஆ.கு.இனால் ஒழுங்குசெய்யப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தினம் கொழும்பு, ப.ஞா.ச.ம. மண்டபத்தின் சர்வதேச ஆய்வுகளுக்கான பண்டாரநாயக்க நிலைய கேட்போர்கூடத்தில் 2016 டிசம்பர் 9 அன்று சிவில் சமூகத்தினதும், பாதுகாப்புப் படைகளினதும், ஐ.நா. முகவராண்மைகளினதும், உறுப்பினர்களினதும் மற்றும் அரசாங்க அதிகாரிகளினதும் பங்கெடுப்புடன் நடைபெற்றது.



இயக்கத்தின் சின்னம்

'யாரோ ஒருவரின் உரிமைக்காக இன்று எழுந்து நிற்போம்' என்ற கருப்பொருள் மீதான அடிப்படையில் தனது வரவேற்பு உரையில் தவிசாளர் இன்றைய உலகில் ஏனையோரின் உரிமைகளுக்காக நிலைத்திருப்பதில் மாபெரும் சவாலாக பரவலாக்கத்தின் ஏற்றுக்கொள்ளலை அடையாளங்காண்கின்ற அதேவேளை, மனித உரிமைகளின் தரங்களை அங்கீகரித்தல், மனித உரிமைகளின் பொறிமுறைகளை அங்கீகரித்தல், மனித உரிமைகள் கல்விக்கு வசதியளித்தல் மற்றும் மனித உரிமைகளின் பாதுகாப்பினை நோக்கி எமது கடமையை அங்கீகரித்தல் என்ற நான்கு பிரதான கட்டங்களைக் கொண்ட மனித உரிமைகளின் பாதுகாப்பின் முழுச் சுற்றொன்றை நாம் நிறைவுசெய்துவிட்டோம் என வலியுறுத்தினார்.

இலங்கையின் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பெண் ஊழியர்களைப் பிரதிநிதிப்படுத்தும் ஊழியர்களின் கூட்டொன்றான 'தபிந்து' கூட்டின் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளரே முக்கிய சொற்பொழிவாளராவார். சுதந்திர வர்த்தக வலயத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்காக பணியாற்றிய 21 வருடங்களைக் கொண்ட தனது அனுபவங்களை அவர்



பார்வையாளர் முன் அங்கவீனத்திலான உரிமைகள் செயலார்வலர் ஒருவர் உரையாற்றுகிறார்

பரிமாறினார். மேலதிகமாக, பெண்கள் மீதான தொந்தரவு, அங்கவீன உரிமைகள் மற்றும் பெண்களை அதிகாரமூட்டல் போன்ற பிரச்சனைகள் மீது பணியாற்றும் பெருமளவு வேறு மனித உரிமைகள் செயலாா்வலா்கள் 'ஏனையோரின் உரிமைகளுக்காக ஆதரவளித்தல்' மீதான தமது அனுபவங்களைப் பரிமாறினார்கள்.

- **சா்வதேச மகளிா் தின நினைவுகூரல்**




2016 சா்வதேசப் பெண்கள் தின நினைவுகூரலுக்கான கருப்பொருள் “அவள் இன்றி ஓா் உலகம்” என்பதாகும். நினைவுகூரலின் அங்கமாக தீவகம்பூராவிலுமான அடைதலொன்றுடன் பெருமளவு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. முழு அளவிலான கருப்பொருளுக்கு அமைவாக இயக்கத்திற்கு அடையாளச் சின்னமொன்றை வடிவமைப்பதற்கு கட்புல, அரங்கற் கலைகள் பல்கலைக்கழகத்தைச் சோ்ந்த திரு.சந்ரகுப்த தேனுவர தன்னிச்சையாக முன்வந்தாா்.



பலதரப்பட்ட துறைகளில் புதுமையான தலைமைத்துவத் தகுதிகளை எடுத்துக் காட்டிய பெண்களின் பரவலிலான குழாமொன்றை வரவழைத்து, ஆணைக் குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட குழாம் கலந்துரையாடலே நிகழ்ச்சியின் சிறப்பம்சமாகும். ஆடையலங்காரத் துறையின் ஒரு பெண் தொழில் நுட்பவியலாளா், மத்திய மாகாண சபையின் ஓா் உறுப்பினா், மொனராகலை மாவட்டத்தின் சிவில் சமூக வளப் பாதுகாப்பின் தலைவா், எயிட்ஸ் நோயினால் தொற்றப்பட்ட சிவில் சமூக செயலாா்வலா், முல்லைத்தீவு மாவட்டப் பிரஜைகள் குழுவின் செயலாளா், ஓா் இளம் பெண் வழக்கறிஞா் மற்றும் தலைமைத்துவ வகிபங்குகளை வகிக்கும் இரு சிவில் சமூகச் செயலாா்வலா்கள் ஆகியோரைக் குழாம் கொண்டிருந்தது. ஏற்றுக்கொள்ளப்படாததாகச் சொல்கின்ற நாட்டில் உள்ள மறைந்துள்ள பெண் தலைமைத்துவத்தை முனைவுபடுத்துவதே குழாம் கலந்துரையாடலின் நோக்கமாகும்.



முக்கிய உரையை கலாநிதி சௌமியா லியனகே ஆற்றுகின்றாா்

இலங்கையில் கட்புல, அரங்கற் கலைகள் பல்கலைக்கழகத்தைச் சோ்ந்த கலாநிதி சௌமியா லியனகே முக்கிய உரையை ஆற்றினாா். ஆண் ஒருவரின் கண்ணோட்டத்திலிருந்து சமூகத்தில் பெண்களின் வகிபங்கினுள் அக்கறையிலான பூரண அறிவுகளை அவா் தனது உரையில் பரிமாறினாா். குடும்பத்திலும் அத்துடன் பரந்த சமூகத்திலும் பெண்களினால் ஆற்றப்படும் வகிபங்குகளின் பல்வகைகள், பெண்களாக அவா்கள் எதிா்நோக்குகின்ற சவால்கள் மற்றும் சமூகத்தினால் பெண் உடலைக் கொச்சைப்படுத்தல் ஆகியன பற்றி கலாநிதி லியனகே உரையாற்றினாா்.

நினைவுகூரலின் அங்கமாக பெண்களினதும் மற்றும் அவர்களது உரிமைகளினதும் முக்கியத்துவம் மீது பொது மக்கள் மத்தியில் விழிப்பியலை உயர்த்துமுகமாக, ‘ஸ்டிக்கர்’ இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது. 2016இன் கருப்பொருளைச் சித்தரிக்கும் ‘ஸ்டிக்கர்’கள் புறக்கோட்டை பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பிக்கின்ற நீண்ட தூர மற்றும் குறுகிய தூர பஸ்களில் காட்சிப்படுத்தப்பட்டதுடன், இதைத் தொடர்ந்து பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தின் செய்தியைப் பரப்புவதற்கான முயற்சியொன்றில் பிரயாணிகளுடன் முறைசாராத கலந்துரையாடலொன்றும் நடத்தப்பட்டது.

மேலும், ஒரு ‘வீடியோ’ போட்டியும் நடைபெற்று, இது பாடசாலைச் சிறுவர்களும் அத்துடன் ஏதேனும் வேறு அக்கறையைக் கொண்ட தரப்புக்களின் பகிரங்க வகுதியொன்றும் பங்குபற்றக்கூடியதாகும். இந்தப் போட்டியின் ஊடாக, சமகாலச் சமூகத்தில் பெண்களினால் ஆற்றப்படும் வகிபங்கினை வலியுறுத்துவதற்கும் மற்றும் புரிந்துகொள்வதற்கும் பொது மக்களை மேலும் ஊக்குவிப்பதற்கான உத்தேசத்தை இ.ம.உ.ஆ.கு. கொண்டிருந்தது. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்திப்பத்திரிகைகள் ஊடாக போட்டி பிரச்சாரப்படுத்தப்பட்டது. பதிலிறுப்பாக, ஏழு ‘வீடியோ’க்களை (பாடசாலைச் சிறுவர்களிடமிருந்து இரண்டு மற்றும் திறந்த வகுதியிலிருந்து ஐந்து) ஆணைக்குழு பெற்றது. துரதிஸ்டவசமாக தெரிவுக்கு எந்தவொரு ‘வீடியோ’வும் தகுதியடையவில்லை.

- **இலக்கரீதியிலான பதாகைகளைக் காட்சிப்படுத்தல்**

இலக்கரீதியிலான காலத்தைத் தழுவி, ஒரு மாதத்தைக் கொண்ட காலமொன்றுக்கு, கொழும்பு நகரத்தைச் சுற்றி மூன்று முக்கியமான இடங்களில் மக்களின் உரிமை மீதான முக்கியமான செய்திகளைக் கொண்டுள்ள இலக்கரீதியிலான பதாதைகளைக் காட்சிப்படுத்துவதற்கு அபான்ஸ் பிறைலட் லிமிற்.உடன் உடன்படிக்கையொன்றை இ.ம.உ.ஆ.கு. செய்து கொண்டது. மேலதிகமாக, இரு வாரங்களுக்கு கட்டணமின்றி அமைவிடம் ஒன்றில் (ஆர்.எ.டீ மெல் மாவத்தை) செய்திகளைக் காட்சிப்படுத்துவதற்கு கம்பெனி உடன்பட்டது. ஆணைக்குழுவினால் விருத்திசெய்யப்பட்ட ‘சித்திரவதையை நிறுத்துதல்’ என்ற கருப்பொருள் மீது 12 வினாடி ‘வீடியோ அனிமேஷன்களை காட்சிப்படுத்தல் நடைபெற்றது. பாரிய பார்வையாளர் மத்தியில் அதன் செய்திகளைப் பரப்புவதில் அதற்கு கட்டுப்படியான தகுதிக்காக காட்சிப்படுத்தலின் இந்த முறையை ஆணைக்குழு தெரிவுசெய்தது.

- **சித்திரவதையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக சர்வதேச தினம் நினைவுகூரப்பட்டது**

**“சித்திரவதையை நிறுத்துக”** என்ற கருப்பொருள் மீதான அடிப்படையில் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக சர்வதேசத் தினத்தை இ.ம.உ.ஆ.கு. நினைவுகூர்ந்தது. தீவகம் பூராவிலுமான இயக்கம் இ.ம.உ.ஆ.கு.இன் தலைமை அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டதுடன், அது பத்துப் பிராந்திய அலுவலகங்களினாலும் அனுஷ்டிக்கப்பட்டது. சுதந்திரச் சதுக்கத்தில் நடைபெற்ற பகிரங்க அணிவகுப்பொன்றுடனும், நினைவுகூரல் நிகழ்ச்சியொன்றுடனும் தேசிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மற்றும் கௌரவ சட்டம், ஒழுங்கு அமைச்சர் ஆகியோரும் அத்துடன் சமயத் தலைவர்கள்,

சுதந்திர ஆணைக் குழுக்களின் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள், முப்படைகளினதும், பொலிஸினதும் ஆளணியினர், சிவில் பந்தோபஸ்து, பாதுகாப்பு ஆளணியினர், பாடசாலைச் சிறுவர்கள், இளைஞர்கள், சிவில் சமூகக் குழுக்கள், சித்திரவதை யினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்களின் உறுப்பினர்கள் ஆகியோரும் பங்குபற்றினர்.



நினைவுகூரல் நிகழ்வில் ஆற்றுகை



பகிரங்க அணிவகுப்பில் பங்கெடுப்பாளர்கள்

- **பாலியல் முனைப்பாக்கத்திற்கும், பால்நிலை அடையாளத்திற்கும் மற்றும் பால்நிலைப் பண்புக்கூறுகளுக்குமான தொடர்பில் மனித உரிமைகளை (SOGI உரிமைகளை) மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் மீதான செயலமர்வு விருந்தோம்பல்**

LGBTIQ சமூகத்தின் மனித உரிமைகளின் மேம்பாட்டுக்கும், பாதுகாப்புக்கும் ஆதரித்துவாதாடுதலைப் பலப்படுத்துவதற்காக அச் சமூகத்துடன் ஈடுபடுவதில் பிராந்தியத்தில் உள்ள தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களினதும் மற்றும் சிவில் சமூகத் தாபனங்களினதும் ஆற்றலைப் பலப்படுத்துவதற்காக ஆசிய பசுபிக் அரங்கினாலும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினாலும், பாலியல் முனைப்பாக்கத்திற்கும், பால்நிலை அடையாளத்திற்கும் மற்றும் பால்நிலைப் பண்புக்கூறுகளுக்குமான தொடர்பில் மனித உரிமைகளை (SOGI உரிமைகளை) மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியன மீதான பிராந்தியச் செயலமர்வொன்றை ஆணைக்குழு விருந்தோம்பியது. இது கொழும்பில் நடைபெற்ற ஓர் 'ஒன்லைன்' பயிற்சிநெறி மற்றும் ஒரு நேருக்கு நேரான செயலமர்வு என இரு அம்சங்களைக் கொண்ட கலப்பிலான கற்கைப் பயிற்சிநெறியொன்றை உள்ளடக்கியிருந்தது. செயலமர்வில் 07 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் பங்கெடுத்தனர்.

- **நடமாடும் சேவைகளுக்கு வளங்கள்**

இதனிடையே, கொழும்பின் நகரப் பகுதிகளில் விளிம்புநிலையிலான குழுக்களுக்கு தேசிய இணை-வாழ்வு, கலந்தாய்வு, அரசகரும மொழிகள் அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட நடமாடும் சேவைகளுக்கு வளங்களை ஆணைக்குழு வழங்கியது.

- **வள நபர்களாக ஆணையாளர்களினாலும், ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரிகளினாலும் பெறப்பட்ட அழைப்புக்கள்**

ஏனைய வருடங்களில் உள்ளவாறு, அரசாங்கத் துறையினுள்ளும் மற்றும் சிவில் சமூக தாபனங்களினாலும் பெருமளவு பன்னிலையிலான அரங்குகளுக்கு வள நபர்களாக ஆணையாளர்களும், ஆணைக்குழுவின் சிரேஸ்ட அதிகாரிகளும் அழைக்கப்பட்டனர். இராணுவ ஆளணியினருக்கு சிறுபான்மை உரிமைகளும், மனித

உரிமைகளும் மீதான கருத்தரங்கொன்றுக்கு இ.ம.உ.ஆ.கு.இன் அலுவலர்களை இலங்கை இராணுவத்தின் மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்டத்தின் பணிப்பாளர் சபை அழைத்தது. அதேவேளை, கொழும்பு தபாலக முகாமைத்துவப் பயிற்சிக் கல்லூரியின் புலனாய்வு அலுவலகர்களுக்கான செயலமர்வொன்றுக்கும் அத்துடன் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் தாதிகளுக்கான நோயாளர்களின் உரிமைகள்.ீமனித உரிமைகள் மீதான அமர்வொன்றுக்கும் ஆணைக்குழு அழைக்கப்பட்டது. மாற்று பால்நிலை மக்களுக்கு மனித உரிமைகளினதும், ஆளடையாளத்திற்கான உரிமையினதும் மீதான செயலமர்வொன்றுக்கு ஆணைக்குழுவை இதயத்திலிருந்து இதயத்திற்கு அமைப்பு அழைத்தது.

- **வெளிவாரி நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பு**

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மீது சிவில் சமூகத்துடன் திறந்த கலந்தாய்வு அமர்வு மற்றும் ஒருங்கிணைப்பு நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான செயலகத்தினால் (SRCM) ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய உசாவுகை நடைமுறை போன்ற வெளிவாரித் தரப்புக்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பெருமளவு நிகழ்ச்சிகளிலும் ஆணைக்குழு பங்கெடுத்தது.

## 5.2 ஊடகங்களுடன் ஈடுபடுதல்

அதன் வெளிக்கள முயற்சிகளின் அங்கமாக, முக்கியமான பிரச்சனைகளையும் அத்துடன் ஆணைக்குழுவின் செயற்பாடுகளையும் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக ஊடகங்களுடன் ஆணைக்குழு ஈடுபடுகின்றது. மேம்பாட்டிலான செயற்பாடுகளுக்காக பாரம்பரிய அச்சு மற்றும் இலத்திரனில் ஊடகங்களையும் அத்துடன் ‘ஒன்லைன்’ மேடைகளையும் ஆணைக்குழு தொழிலுக்கமர்த்தியது.

- **மனித உரிமைகள் துணுக்கு இயக்கம்**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (இ.ஒ.கூ.) தேசிய மற்றும் பிராந்திய அலைவரிசைகள் ஊடாக சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் ‘‘மனித உரிமைகள் துணுக்கு இயக்கம்’’ என்ற நிகழ்சசியை ஒலிபரப்புவதற்கு இ.ஒ.கூ.உடன் கலந்துரையாடல்களை இ.ம.உ.ஆ.கு. நடத்தியது. ஆரம்ப உடன்பாடு 5 மாதங்களுக்கு என்பதுடன், இது பின்னர் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டது. 2016இல், பெண்களின் உரிமைகள், சித்திரவதையிலிருந்து சுதந்திரம் ஆகியவற்றுக்கு ஒவ்வொன்றும் தொடர்பிலானது என மூன்று துணுக்குகளை ஆணைக்குழு ஒலிபரப்பியது.

- **பாரம்பரியமான அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுடன் ஈடுபடுதல்**

சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக சர்வதேசத் தினத்தை நினைவுகூருவதற்காக ஆணைக்குழுவின் சித்திரவதை எதிர்ப்பு இயக்கம் மீது பொதுமக்களுக்கு சுருக்கமாக விளக்குவதற்காக 29.06.2016 அன்று பத்திரிகை மகாநாடொன்று நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இதழியலாளர்களுக்கு மனித உரிமைகள் மீது பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றையும் ஆணைக்குழு நடத்தியது.

- **'ஒன்லைன்' அரங்குகளின் பயன்பாடு**

ஆணைக்குழுவின் இணையதளம் மீது சகல அதன் பரிந்துரைகளை மேலேற்றுவதை ஆணைக்குழு ஆரம்பித்தது. பிராந்தியத்திலும், பூகோளரீதியிலும் பரந்த பார்வையாளர்களுக்கு அதன் பணியைப் பரப்புவதற்காக ஆசிய பசுபிக் அரங்கின் செய்தித்திரட்டினையும் ஆணைக்குழு பயன்படுத்தியது.

## 5.3 சிவில் சமூகத்துடன் ஈடுபடுதல்

ஆணைக்குழு, விசேடமாக பிராந்திய அலுவலகங்கள் ஊடாக சிவில் சமூகத்துடன் நெருக்கமாக ஈடுபடுகின்றது. ஆணைக்குழுவின் பணியை சிவில் சமூகம் வளமாக்குவதனால், அதனைப் பாரிய வளமொன்றாக ஆணைக்குழு நோக்குகின்றது. அதேவேளை, மறுபுறத்தில் மனித உரிமைகள் மீது சிவில் சமூகத்தின் பணிக்கும் ஆணைக்குழு பங்களிக்கின்றது. பின்வருமாறு போன்ற எண்ணற்ற வழிகளில் சிவில் சமூகத்துடன் இ.ம.உ.ஆ.கு. ஈடுபடுகின்றது:

- **பிராந்திய சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக்கள்**

பிராந்திய மட்டத்தில் சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஊடாக ஆணைக்குழுவினால் பேணப்படும் நெருங்கிய ஒத்துழைப்பானது மனித உரிமைகளின் மீறல்களை அடையாளங்காண்பதில் அல்லது ஆணைக்குழுவின் தலையீட்டினை வேண்டுகின்ற சூழ்நிலைகளில் ஆணைக்குழுவுக்கு உதவுகின்றது. பொது பிரதேசத்தில் மனித உரிமைகளின் பாதுகாப்பினைக் கண்காணிப்பதில் ஆணைக்குழுவுக்கு உப-குழுக்கள் உதவுகின்றன.

- **கருப்பொருள்-சார்ந்த உப-குழுக்களின் உறுப்பினர்களை சிவில் சமூகப் பிரதிநிதிகள்**

சிவில் சமூகத்தின் முக்கியமான உறுப்பினர்களும், சிவில் சமூகத் தாபனத்தைச் சேர்ந்தவர்களும் கருப்பொருள்-சார்ந்த உப-குழுக்களின் உறுப்பினர்கள் என்பதுடன், ஆணைக்குழுவின் பணிக்கு மேலதிகமாக பங்களிக்கின்றனர். ஆணைக்குழுவின் கொள்கை மட்ட முயற்சிகளை வளமாக்குவதில் சிவில் சமூக உறுப்பினர்களின் நிபுணத்துவத்திலிருந்து நன்மையடைவதற்கு ஆணைக்குழுவுக்கு வாய்ப்பொன்றே உப-குழுக்களாகும்.

- **சிவில் சமூகத் தாபனங்களினால் ஒழுங்குபடுத்தப்படும் நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பு**

தகவலுக்கான உரிமை மீதான சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைப்பொறுப்பின் பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் நிகழ்ச்சித்திட்டத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட குழாம் கலந்துரையாடல், ஆசிய மன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட இலங்கையின் உளவியல் சுகாதாரம், உளநிலைச்சமூக ஆதரவு சேவையில் நிலைமாற்றம் (2004-2015) மீதான அறிக்கையின் ஆரம்பம், பிரிட்டி' உயர் ஸ்தானிகராலயம் மற்றும் குழுமுருளு ஆகியவற்றினால் ஒழுங்குபடுத்தப்பட்ட 'பாலியல் வன்முறையைத் தடுத்தல்: இலங்கையில் களங்கத்தை சமாளித்தல்' மீதான செயலமர்வு அத்துடன் பெண்கள், ஊடகக் கூட்டினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பால்நிலைப் பதிலிறுப்புக் கொள்கை வகுத்தல் மீதான உசாவுகை போன்ற சிவில் சமூகத் தாபனங்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பெருமளவு நிகழ்ச்சிகளில் ஆணைக்குழு பங்கெடுத்தது.

ஒற்றுமை நிலையத்தினால் (Soldarity Centre) ஒழுங்குபடுத்தப்பட்ட புலம்பெயர் ஊழியர்களுக்காக நீதிக்கான பொதுசன அக்கறையிலான வழக்குத்தொடுப்பினதும், அடைதலினதும் மீது வழக்கறிஞர்களுக்கான உப-பிராந்தியச் செயலமர்விலும், சர்வதேசச் சிறுபான்மை உரிமைகள் குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தென் ஆசியாவில் மத நம்பிக்கையின் சுதந்திரத்தை மேம்படுத்துதல் மற்றும் முன்னேற்றுதல் மீதான ஆரம்ப தேசிய வலைப்பின்னலாக்கல் கூட்டம் தொடர்பிலான பின்தொடர் கூட்டமொன்றிலும் தவிசாளர் பங்கெடுத்தார்.

## 5.4 ஆலோசனை வழங்கல்

பல வருடங்களைக் கொண்ட தொடர்பின்மையின் பின்னர், நாட்டின் இளைஞர்களில், விசேடமாக மனித உரிமைகளின் மேம்பாட்டிலும், பாதுகாப்பிலும் முதலிடுவது சரியான முன்னோக்கிய நடவடிக்கையொன்று என்ற திடநம்பிக்கையின் காரணமாக, இ.ம.உ.ஆ.கு. அனுபவத்திலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆணைக்குழு புத்துயிரளித்தது. 2017 முழுவதும் தொண்டர் அடிப்படையொன்றின் மீது சேவையாற்றுவதற்கு ஏதேனும் பிரிவைக் கொண்ட பட்டதாரி மாணவர்களிடமிருந்தும் மற்றும் அண்மைய பட்டதாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. வெற்றியீட்டுகின்ற தேருனர்களுக்கு இ.ம.உ.ஆ.கு.இன் வகிபங்குக்கு வெளிப்படுத்தலை வழங்குவதும், ஆராய்ச்சி உட்பட ஆணைக்குழுவின் செற்பாடுகளை மேம்படுத்துவதும் அத்துடன் பாதுகாப்பதும் மற்றும் இளைஞர்களில் பொதுசன அக்கறையிலான செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்பினை பேணுவதுமே நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். அனுபவத்திலான பயிற்சிகள் 3 மாதங்களைக் கொண்ட குறைந்தபட்ச காலமொன்றுக்காகும் என்பதுடன், அதை தலைமை அலுவலகத்தில் அல்லது பிராந்திய அலுவலகம் ஒன்றில் சேவையாற்றுவதற்கான தெரிவினைப் பயிற்சியாளர்கள் கொண்டிருந்தனர். 2016இன் போது, 282 விண்ணப்பங்களை ஆணைக்குழு பெற்றதுடன், 24 வெற்றியடைந்த தேருனர்கள் தலைமை அலுவலகத்திலும் (07) மற்றும் பிராந்திய அலுவலகங்களிலும் (17) அமர்த்தப்பட்டனர்.

நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து அவர்கள் பெற்றிருந்த கற்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தைப் பலப்படுத்துவதன் வழிவகைகள் ஆகியன மீது

பயிற்சியாளர்களிடமிருந்து பின்னூட்டல்களைப் பெறுவதற்காக 2016 ஜூனில் பின்னூட்டல் அமர்வொன்று நடைபெற்றது.



## அத்தியாயம் 6:

# சர்வதேசக் கூட்டுமுயற்சி

6.1. சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை மேம்படுத்தல்
6.2. ஆசிய பசுபிக் அரங்கத்துடன் (APF) இணைப்பினைப் பலப்படுத்துதல்
6.3. சர்வதேச உறுப்புக்களுக்கு அறிக்கைகளையும், பதிலிறுப்புக்களையும் சமர்ப்பித்தல்
6.4. வேறு சர்வதேச கூட்டுமுயற்சிகள்

# 06 சர்வதேசக் கூட்டுமுயற்சி

## 6.1 சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை மேம்படுத்தல்

2016இல், அண்மையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை மேம்படுத்துவதில் சர்வதேச மற்றும் பிராந்திய மனித உரிமைகள் தாபனங்களுடனும் மற்றும் பாதுகாப்புப் பொறிமுறைகளுடனும் தீவிரமான தொடர்பாடலைக் கொண்டிருப்பதையும் அத்துடன் ஒத்துழைப்பதையும் தொடர்ந்தது.

மனித உரிமைகள் மேம்பாட்டுக்கும், பாதுகாப்புக்கும் ஆணைக்குழுவின் தீவிரமான ஈடுபடுத்தலையும், அர்ப்பணிப்பினையும் 2016 மார்ச் 08 திகதியிடப்பட்ட கடிதத்தில் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) உயர் ஆணையாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக் கடிதத்தில், ஆணைக்குழுவின் பணியை உயர் ஆணையாளர் பாராட்டினார். (பார்க்க: பிற்சேர்க்கை 5) 2016 செப்ரெம்பரில், இலங்கைக்கான தனது வருகைதரலின் போது தனது உரையில் இ.ம.உ.ஆ.கு.இன் பணியை ஐ.நா. செயலாளர் நாயகம் திரு. பான் கீ மூன் பாராட்டிய போது, ஆணைக்குழுவின் அர்ப்பணிப்பும், பணியும் மேலும் அங்கீகாரத்தை ஈட்டியது. 2016இன் போது, செயலாளர் நாயகத்தையும் மற்றும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகத்திலிருந்து (OHCHR) அதிகாரிகளையும் ஆணைக்குழு சந்தித்தது.

2015 ஒக்ரோபருக்கும் 2017 ஜனவரிக்கும் இடையில், இலங்கையில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறுதலையும் மற்றும் மனித உரிமைகளையும் மேம்படுத்துவது மீது மனித உரிமைகள் பேரவை தீர்மானம் 30/1இன் அமுலாக்கத்தில் செய்யப்பட்ட முன்னேற்றத்தை மதிப்பிடுவதில் இலங்கை மீதான OHCHRஇன் அறிக்கையில், இ.ம.உ.ஆ.கு.உடன் அது நெருக்கமாகப் பணியாற்றுவதைத் ஏற்றுக்கொண்டது. ‘‘முக்கியமான பிரச்சனைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு தொனியுள்ளதாகவும், தீவிரமாகவும் இருந்த போதும், சட்டவாக்க நடைமுறைகள் மீது ஆலோசனை வழங்குவதில் அதன் ஆற்றலளவு தொடர்ந்துமே குறைத்தே பயன்படுத்தப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் செயற்றிறனாகவும், பயனுறுதிவாய்ந்ததாகவும் ஈடுபடுவதற்கும் அத்துடன் அதன் பரிந்துரைகளைப் பொறுப்புக்கு எடுப்பதற்கும் அதற்கு ஆதரவளிப்பதன் முக்கியத்துவத்தினை அரசாங்கத்திற்கு உயர் ஆணையாளர் மீள்-வலியுறுத்தினார்’’ என அறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது. ‘‘சட்டவாக்கத்தினதும், வரைவு சட்டவாக்கத்தினதும் மதிப்பாய்வு உட்பட அதன் ஆணையை முழுமையாக நிறைவேற்றுவதற்கு அது போதியளவு வளங்களைப் பெறுவதை உறுதிப்படுத்துவது

உட்பட மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு'' ஆதரவளிப்பதை அறிக்கை பரிந்துரைக்கின்றது.

2016இல், ஐ.நா.இன் பெருமளவு விசேட ஆணை உடமையாளர்களை இ.ம.உ.ஆ.கு. சந்தித்தது. அவர்கள் நீதிபதிகளினதும், வழக்கறிஞர்களினதும் சுதந்திரம் மீதான ஐ.நா. விசேட அறிக்கையிடுனர், இடம்பெறாமையின் உண்மையினதும், நீதியினதும், இழப்பீட்டினதும் மற்றும் உத்தரவாதத்தினதும் மேம்பாடு மீதான ஐ.நா. விசேட அறிக்கையிடுனர், சித்திரவதையின் மற்றும் தண்டனையின் மனிதத்தன்மையற்றதாக அல்லது தரக்குறைவாக நடத்துதல் மீதான ஐ.நா. விசேட அறிக்கையிடுனர் மற்றும் மனித உரிமைகள் எதிர்ப்பாளர்கள் மீதான ஐ.நா. விசேட அறிக்கையிடுனர் ஆகியோராவர். பிரதிநிதிகளுடன் பரஸ்பர பொருத்தப்பாட்டுப் பிரச்சனைகள் குறித்து தவிசாளரும், ஆணையாளர்களும் கலந்துரையாடியதுடன், உடனடியான பதிலிறுப்புக்களை அவசியப்படுத்துவதாக விசேட ஆணை உடமையாளர்களினால் முனைவுபடுத்தப்பட்ட சில பிரச்சனைகளையும் ஏற்றுக்கொண்டது.

இலங்கைக்கான வருகைதரல்களைப் பின்தொடர்ந்து, தமது தொடர்பான அறிக்கைகளில் நீதிபதிகளினதும், வழக்கறிஞர்களினதும் சுதந்திரம் மீதான விசேட அறிக்கையிடுனரினதும், சிறுபான்மையினர் மீதான விசேட அறிக்கையிடுனரும், ''மனித உரிமைகள் ஆணைக்குழுவைத் தலைமைவகித்த புதியதும், உயர்ந்தளவிலானதுமான நம்பகமானதும், தகுதிவாய்ந்ததுமான ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்'' என்பதை ஏற்றுக்கொண்டனர். ஆனால், ''போதிய நிதி, பௌதீக மற்றும் மனித வளங்கள் இன்மை, அத்துடன் போதிய பணியாளர் பயிற்சி, நிபுணத்துவம் இன்மை, பொலிஸ் உட்பட அரசாங்க நிறுவனங்களிலிருந்து நிறுவனரீதியிலான தடை, அத்துடன் இறுதியான நிர்ணயங்களும், பரிந்துரைகளும் அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு வினைப்படுத்தல் அதிகாரங்கள் இன்மை ஆகியன உள்ளிட்ட சவால்களுக்கு ஆணைக்குழு தொடர்ந்தும் முகங்கொடுக்கின்றது'' என்ற உண்மை மீதான வலியுறுத்தலையும் முன்வைத்துள்ளனர். ''போதியளவு மனித மற்றும் நிதிசார் வளங்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தி, இந்த நிறுவனங்களுக்கும், பொறிமுறைகளுக்கும் முழுமையான நிதிசார் ஒத்துழைப்பு'' நீடிக்கப்படுவதை இந்த இரு அறிக்கைகளும் பரிந்துரைத்துள்ளன.

சந்தேக நபர் ஒருவரின் வாக்குமூலம் பதிவுசெய்யப்படும் வரை, அவரின் வழக்கறிஞர் ஒருவருக்கான அடைதலை அவருக்கு மறுக்கின்றது, அவ்வாறாக சித்திரவதைக்கும், தவறாக நடத்தப்படுவதற்கும் எதிராக ஏதேனும் பாதுகாப்பினை நீக்குவதுடன், நியதியின் உண்மையான நோக்கத்தினை தோற்கடிப்பதுடன், அரசியலமைப்பின் உறுப்புரை 13(3)இல் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளவாறு நியாயமான விசாரணையொன்றுக்கான அடிப்படை உரிமை மீது தாக்குகின்ற சித்திரவதையினதும் மற்றும் தண்டனையினதும் வேறு கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது தரக்குறைவாக நடத்துதல் மீதான விசேட அறிக்கையிடுனர் இ.ம.உ.ஆ.கு.இன் கரிசனையை ''சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு முரண்பட்டுள்ள குற்றவியல் நடைமுறை நியதிச் சட்டத்திற்கமைவாக அண்மைய முன்மொழியப்பட்ட திருத்தமானது மீள்வலியுறுத்துகின்றது.'' இ.ம.உ.ஆ.கு.இன் நிறுவனரீதியிலான முன்னேற்றத்திற்கான அவசியத்தை மீள்-வலியுறுத்திய அறிக்கையானது சம்பந்தப்பட்டவர்கள், ''புதிய தேசிய பாதுகாப்புச் சட்டவாக்கத்தினை வரைவது

தொடர்பில் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளை ஆய்வுசெய்து, ஒன்றிணைக்க வேண்டும்… தமது சுதந்திரத்தை இழந்த சகல நபர்களின் சகல பதிவுகளும், பதிவேடுகளும் இலத்திரனியல் படுத்தப்பட வேண்டும் என்பதுடன், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அடையத்தக்கதாக அவர்களைச் செய்யவேண்டும்… தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட சர்வதேச மற்றும் தேசிய உறுப்புக்களினால் சுதந்திரம் பிடுங்கப்பட்ட இடங்களின் கிரமமானதும், பயனுறுதிவாய்ந்ததும் மற்றும் சுதந்திரமானதுமான கண்காணித்தலை அங்கீகரித்து, வசதிப்படுத்த வேண்டும்'' என மேலும் பரிந்துரைத்தது.

மேலதிகமாக, தொலையுரையாடல் ஊடாக புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் மீதான ஐ.நா. குழுவுக்கு இலங்கையின் குறித்த காலத்திலான அறிக்கையின் மதிப்பாய்விலும் தவிசாளர் பங்கெடுத்ததுடன், குழுவுக்கு பொருத்தமான பிரச்சனைகளையும் முனைவுபடுத்தினார்.

சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினைப் பேணுவதற்கான அதன் கடப்பாட்டுக்கு மேலதிகமாக, புலம்பெயர் தொழிலாளர் உரிமைகள் மீது ஐ.நா. குழுவுக்கு இலங்கையின் 2ஆவது குறித்த காலத்திலான அறிக்கை மீது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கொடூரமாகவும், மனிதத்தன்மையற்றதாகவும், தரக்குறைவாகவும் சித்திரவதையை நடத்துதல் அல்லது தண்டித்தல் மீது ஐ.நா. விசேட அறிக்கையிடுனரின் பூர்வாங்க அவதானிப்புகளையிட்டு கலந்துரையாடுவதற்கு அதே அமைச்சு போன்ற அரசாங்க நிறுவனங்களுடன் பெருமளவு கூட்டங்களிலும், மகளிர் விவகார அமைச்சில் CEDAW குழுவுக்கான 8ஆவது குறித்த காலத்திலான அறிக்கை மீது முடித்துவைத்தல் அவதானிப்புக்கள் மீதான கலந்துரையாடலிலும், சட்டம், சமூகம் நம்பிக்கைப்பொறுப்பினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அங்கவீனர்கள் மீது விசேட அறிக்கையிடுனரிடமிருந்து தகவலைக் கோருவதற்கு வரைவு பதிலிறுப்பு மீதான உசாவுகையிலும் ஆணைக்குழு பங்கெடுத்தது.

## 6.2 ஆசிய பசுபிக் அரங்கத்துடன் (APF) இணைப்பினைப் பலப்படுத்துதல்

ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தையும் அத்துடன் இலங்கையில் மனித உரிமைகளின் சூழ்நிலையையும் பரிமாறுவதற்காக 2016 ஒக்ரோபரில் தாய்லாந்து, பாங்கொக்கில் நடைபெற்ற யீகுஇன் வருடாந்த பொதுக்கூட்டத்தில் தவிசாளர் பங்கெடுத்தார். பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்தில் அறிவைப் பரிமாறுதல், நிபுணத்துவம் மற்றும் கூட்டுமுயற்சி ஆகியன ஊடாக, பலமான தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதற்காக ஆதரவளிக்கும் NHRIஇன் பிராந்திய வலைப்பின்னலொன்றே APF ஆகும். இது பிராந்தியத்தின் அதன் எதிரிணைகளை இணைப்பதற்கு ஆணைக்குழுவுக்கான முக்கியமான அரங்கொன்றாகும்.

## 6.3 சர்வதேச உறுப்புக்களுக்கு அறிக்கை களையும், பதிலிறுப்புக்களையும் சமர்ப்பித்தல்

2016 ஒக்ரோபரில், இலங்கையின் 5ஆவது குறித்த காலத்திலான அறிக்கையை மதிப்பாய்ந்த சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. குழுவுக்கு அதன் அறிக்கையை இ.ம.உ.ஆ.கு. அனுப்பியது. ஜெனீவாவில் 2016 செப்ரெம் 14-17 வரை நடைபெற்ற அமர்வில் ஆணையாளர்களில் ஒருவர் பங்கெடுத்தார். அறிக்கையில், இலங்கையில் சித்திரவதையினதும் மற்றும் கொடுமையாக நடத்துதலின் வேறு வடிவங்களினதும் வியாபித்திருத்தலுக்கு தொடர்பான அதன் கரிசனைகளையும் அத்துடன் சித்திரவதைச் சம்பவத்தை எதிர்ப்பதற்கு ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் ஆணைக்குழு குறித்துரைத்ததுடன், சித்திரவதைக்கு எதிரான சமவாயத்தில் உறுப்புரை 1இன் பிரகாரம், பாரதூரமான துன்பத்தை விளைவிக்கின்றவை உட்பட சித்திரவதையின் சகல செயற்பாடுகளுக்கும் சித்திரவதையின் வரைவிலக்கணத்தை விஸ்தரிப்பதற்காக சித்திரவதைக்கு எதிரான சமவாய சட்டத்தின் பிரிவு 12இலும் மற்றும் 1994இன் இல.22 வேறு கொடூரமான, மனிதத்தன்மையற்றதாக அல்லது தரக்குறைவாக நடத்துதல் அல்லது தண்டித்தல் சட்டத்திலும் சித்திரவதையின் வரைவிலக்கணத்தைத் திருத்துதல், தடுப்புக்காவல் இடங்களைக் கண்காணிக்கும் அலுவலர்களை கைதுசெய்யும் நடத்தை மற்றும் அகதிகளின் நிலை தொடர்பான சமவாயம், அகதிகளின் நிலை தொடர்பில் சீர்முறை, நாடற்றவர்களின் நிலை தொடர்பிலான சமவாயம் மற்றும் நாடற்றநிலையின் குறைப்பு மீதான சமவாயம் ஆகியன வியாபித்திருப்பது தொடர்பில் தனது கரிசனைகளை ஆணைக்குழு குறித்துரைத்திருந்தது.

## 6.4 வேறு சர்வதேசக் கூட்டுமுயற்சிகள்

